[illegible]

[illegible]-2 [illegible]-3

[illegible]
[illegible]
NOS. 2. 3
[illegible]

egistered M.-483.

# தமிழகம்.

தஞ்சைத் தமிழ்ச்சங்கத்து மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

" தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."

ல்யூம் 2.] 1906௵ மார்ச்சுமீ [ நம்பர்

விஷயங்கள்.

| | |
|---|---|
| சாஸ்திரப் பொருண் மாலை ... ... | பத்திராசிரியர். |
| ஆயுள்விருத்திநூல் .... | S. குமாரசாமிமேற்கொண்டா |
| நியாயமும் வைசேஷிகமும் ... ... | T. A. கோபிநாத ராவ் M. A. |
| குபானம் ... ... | திரு. சோமசுந்தரம்பிள்ளை. |
| நாவிலின் வெளிப்பிராம் ... ... | பத்திராசிரியர். |
| [illegible] | ...ஜை ஐயங்கார். |

## தஞ்சைத் தமிழ்ச்சங்க வர்த்தமானம்.

சென்ற வருஷத்தைப்போலவே இந்தவருஷத்திலும் ... சைத் தமிழ்க்கலாசாலையில் இரண்டு வகுப்புகள் உள்ள. முதல்வகுப்பு மாணாக்கர்கள் அரிச்சந்திரபுராணமும் நன்னூலும் படிக்கின்றனர். இவ்வகுப்பின் உபாத்தியாயர்கள் பண்டிதர் C. S. முத்துஸ்வாமி ஐயர் அவர்களும் ஸ்ரீமத் தி. இராஜமையர் ... சார் அவர்களும். இரண்டாம் வகுப்பு மாணாக்கர்கள் மெற்றிக்குலேஷன் பரீட்சைக்குப் போகின்றவர்கள் ஆகையால், அ... கள் மெற்றிக்குலேஷன் வகுப்பினருக்கு வேண்டிய இலக்கண ... வசனங்களையும் நன்னூலையும் படிக்கின்றனர். இவ்வகுப்... உபாத்தியாயர்கள் தலைமை உபாத்தியாயராகிய பண்டிதர் K. தி... நடேச ஐயர் அவர்களும், பண்டிதர் K. M. சிதம்பர ... அவர்களும்.

சங்கத்தில் மெம்பர்கள் பயின்றுவரும் நூல்கள் சிலப்... ரமும் கம்பராமாயணமும்.

உ. நா. அப்பாசாமி ...
உதவிக்கா...

---

## புத்தகவரவு.

சென்ற மாதத்தில் வரப்பெற்ற மாற்றுப்பத்திரிகைகள்

சுதேசி: பு. 2, இ. 33-40; (2) சிங்கைஜனமித்திர... இ. 27-28; (3) நாகை நீலலோசனி: பு. 17, ... 4-5 ... முத்தூர் கலாநிதி: பு. 26, இ. 5... சினி: பு. ...

145312

Tamil, Nos. 2-3.

OFFICE OF THE REGISTRAR ... DEC 1908 ... MADRAS
341
4.08

சுபமஸ்து.

# தமிழகம்.

வால்யூம் 2 | 1906-ஞு மார்ச்சுமீ | நம்பர் 3.

## சாஸ்திரப்பொருண்மாலை.

### 4. இலைக்கூடுகட்டும் எறும்புகள்.*

எறும்புகள் அங்குமிங்கும் மோதிக்கொண்டிருப்பதை நாம் சதாகாலமும் பார்க்கிறோம். அவைகள் ஒருகாரியமுமில்லாமல் ஓடிக்கொண்டிருப்பனபோல் சில சமயங்களிற் றோற்றுகின்றன. ஒருசமயம் அவைகள் எவ்வளவு சுறுசுறுப்பாய்த் தங்கள் வேலைகளைத் தவறாமல் நடத்துகின்றன என்று வியக்கின்றோம். அவைகளில் ஓரினம் இலைக்கூடுகட்டும் விசித்திரம் மிகவும் வியக்கத்தக்கது. ஆதலின் அதனை இங்கு எடுத்துக்கூறுவாம்.

ஓர் இலையின் வரம்புகளை ஒன்றோடொன்று பொருத்தமுயலுங்காலையில், இவ்வேலையாளரில் ஒரு சிறிய கூட்டம் அவ்விலையின் வரம்புகளைப் பொருத்திப் பொருந்திய இடைவெளியின் குறுக்கே தாம் படுத்து ஒரு வரம்பைத் தமது முன்கால்களாலும் மற்றோர்வரம்பைத் தமது பின்கால்களாலும் பிடித்து ஒருமிக்க முயன்று இரண்டுவரம்புகளும் ஒன்றோடொன்று நெருங்கித்தொடும்வரையில் இழுக்கின்றன. மற்றோர் கூட்டம் அப்

---

*இந்து காலேஜ் பத்திரிகை வால்யூம்—5, பக்கம்—295.

அங்கே புகுந்து நெருங்கிவந்த வரம்புகளைச் சரியாய்ப் பொருத்தமுறச்செய்ய, மூன்றாம் கூட்டம் ஒன்று கடைசியாய் அங்கே வருகின்றது. இந்தக் கூட்டத்தில் ஒவ்வொரு எறும்பும் தனது வாயில் ஒரு புழுவைக் கவ்விக்கொண்டுவருகிறது. இந்த எறும்புகள் தமது வாயிற் கவ்விக்கொண்டுவந்த புழுக்களை பொருத்துவாயில் வைத்து வேலைசெய்கின்றன. பொருத்து வாயில் வைக்கப்பட்ட புழுக்கள் எறும்புகளின் உபத்திரவத்தைச் சகிக்காமல் உச்சிட்டத்தைக் கக்கப் பிசினுண்டாகி இலையின் வரம்புகள் பொருந்துகின்றன. இவ்வாறு வரம்புகள் பொருத்தப்பெற்ற இலைகளே எறும்புக்கூடுகளாகின்றன.

இயற்கை அமைப்பின் அழகைக்கண்டு தெளிக.

## 5. வைரம் முதலிய ரத்தினங்கள்.*

ஸர் உவில்லியம் குருக்ஸ் (Sir William Crookes) என்பவர் சென்றவருஷம் செப்டம்பர் மாதத்தில் கிம்பர்லி(Kimberley) என்ற ஒரு நகரத்தில் ரத்தினங்களின் உற்பத்தியைப்பற்றி ஓர் உபந்நியாசம் செய்தார். மணிகள் நிறையப்பெற்ற உற்கை (விண்வீழ்கொள்ளி) ஆகாசத்திலிருந்து பலதடவைகளில் விழுந்ததென்றும் அதற்குச்சான்று ஐக்கியமாகாணங்களில் ஒன்றாகிய ஆரிஸோனு (Arizona) வில்விழுந்த கானேன்டியாபிலோ(Canon Diablo) என்னும் உற்கையிலிருந்து ரத்தினங்கள் எடுக்கப்பட்டதேயென்றும் அப்போது அவர் கூறினர். பூமியில் வெகு ஆழங் கீழேபடிந்துகிடக்கிற கரி எப்படியோ நமக்குத் தெரியாத வண்ணமாய் ஒருவரும் விரும்பாத தனது கரியநிறம் மாறி யாவரும் விரும்பும்படியான அழகிய ரத்தினமாகின்றதென்று கார்ட்னர் உவில்லியம்ஸ்(Gardner Williams) என்பவர் "தென்னாபிரிக்கா ரத்தினக்கனிகள்" என்னும் தனது இனிய நூலில் கூறியிருக்கிறார்.

சிறிய ரத்தினங்கள் ரசாயனச்சாலைகளிலும் செய்யப்படுகின்றன. அப்படிச் செய்யப்படுங்காலையில், செய்யப்பட்ட ரத்தினத்தின் இண்டிடுக்குகளில் அகப்பட்டுக்கொண்ட காற்று நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் திண்டாடி, வெளியேவர முயல்வதால் ரத்தினம் 'படார்' என்று வெடிக்கும். கனிகளிற் காணப்படும் பெரிய ரத்தினங்களும் இப்படியேதான் சில சமயங்களில்

*இந்து காலேஜ் பத்திரிகை வால்யூம்—6, பக்கம்—18.



வெடிக்கின்றன. சுரங்கத்தில் வேலையாளர் பைகளிலிருந்து சில வெடிக்கக்கண்டிருக்கிறோம். அவர்கள் உஷ்ணமான கைகளிலிருந்து சில வெடிக்கக்கண்டிருக்கிறோம். சிறிய ரத்தினங்களைவிட பெரிய ரத்தினங்களே விசேஷமாக வெடித்துச் சிதறுண்டு போகின்றன. ரத்தினங்களுக்கு வன்மை மிகவுமதிகம். இரண்டு எஃகுப்பாளங்களுக்கிடையே அவைகளைத் தந்து ஜலசலன சக்தியினால் அவைகளை நசுக்கினாலும் அவைகள் கொஞ்சமேனும் நசுங்குதலும் பின்னப்படுதலுமில்லை. இதற்குச்சமானமான கடினலோகம் மற்றொன்றுதான் உளது. அதற்கு இங்கிலீஷில் டாண்டலம் (Tantalum) என்று பெயர். ஜ்வலிக்கிற மின்சார விளக்குகளுக்கு இந்த லோகத்தினால்தான் தந்திக்கம்பிகள் செய்கிறார்கள்.

சில ரத்தினங்கள் ஒளிவிடுகின்றன. ஓர் விலையுயர்ந்த ரத்தினம் ஒரு சிறிய மின்சாரவிளக்கின் ஒளியைச் சிறிதுநேரம் உட்கொண்டபிறகு இருட்டறையில் வைக்கப்பட்டது. அப்போது அது இருட்டைப்போக்கிச் சிறிதுநேரம் ஒளிர்ந்தது. ஒரு துணியில் தேய்க்கப்பட்டபோது அது அத்துணியில் ஒரு ஒளிரேகையை உண்டாக்கியது. ரத்தினங்களின் வர்ணங்கள் பல; படிகரத்தினத்தைப்போலச் சில இளஞ்சிவப்பு, சில நீலம், சில மஞ்சள், சில பசும்மஞ்சள், சில ஆரஞ்சுநிறம், சில சூரியன் கிரணத்திற்பட்டதும் பால்போல் விளங்குகின்றன. ஸர்உவில்லியம் குருக்ஸ் அவர்கள் தேடிவைத்துக்கொண்டிருக்கும் குவியலில் ஒரு அழகிய பசியமணி காற்றற்ற ஆகாயவெளியில் ஒளியைக் காலும். அதற்கும் சாதாரண மெழுகுவத்தி வெளிச்சத்திற்கும் வித்தியாசமொன்றுமில்லை. அந்த மணியின் வெளிச்சத்தைக்கொண்டு ஒருவன் புத்தகம் படிக்கலாம். இயற்கைப்பொருள்களில் வெளிச்சத்தைப் பிரதிபலிக்கும் சக்தி இந்த மணிகளிடத்திலே அதிகமாக உண்டு. அதனால்தான் இவைகளுக்கு அழகு ஏற்படுகிறது. நன்றாய்ச் செதுக்கப்பட்ட ஒரு வைரம் தனது பல சிறிய முகங்களினின்றும் ஒளியைப் பிரதிபலிக்கச் செய்து ஜ்வலிக்கின்ற பல வர்ணக்கதிர்களைப் பரப்பி மனோகரமாய் விளங்குகின்றது. நீர் ஓட்டம் மிகுந்த மணிகளை மதியாதாருண்டோ?

(இன்னும் வரும்.)

பத்ராசிரியர்.

# ஆயுள் விருத்தி நூல்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி.)

(5) மேலும் இதர பிராணிகள் தங்கள் ஆகாரத்தில் கலந்துள்ள கல், மண் முதலிய வஸ்துக்களைத் தங்கள் மலத்தின் வழியாய் நீக்கிக்கொள்ள சக்தியில்லாதபடியால் சரீரம் வறட்சியடைந்து முடிவில் மரணத்திற்குள்ளாவது போலல்லாமல், பட்சிஜாதிகள் அவைகளின் எச்சம் அல்லது மலத்தின் மூலமாய் இரையிற் கலந்திருக்கும் கல், மண் முதலிய கெட்டப் பதார்த்தங்களைப் பிரித்துக்கொள்ளக் கூடிய தன்மையுடையவைகளாயிருப்பதால் அவைகளுக்கு நீண்ட ஆயுள் ஏற்பட்டுள்ளது. திருஷ்டாந்தமாகக் கழுகுகள் நீண்ட வயதுடையவைகளாகக் காணப்படுகின்றன. அவைகளைப்பற்றி முதனூலிற் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது: கொஞ்ச காலத்திற்கு முன்பு லண்டனில் ஓர் பிரபுவுக்கு நன்னம்பிக்கை முனை (Cape of Good Hope) யிலிருந்து தன்னிஷ்டன் ஒருவரால் அனுப்பப்பட்ட ஓர் கழுகானது இங்கிலாந்து தேசத்து அரசனாகிய ஜேம்ஸ் என்பவரின் பிராணிகள் வைக்கப்பட்டுள்ளசாலை (Menagorie) யிலிருந்தும் தற்செயலாய்த் தப்பிப்பறந்து விட்டதென்பதற்கு அறிகுறியாக அதன் கழுத்தணியில் ("His Majisty King of England An. 1610" என்று) ஜேம்ஸ் அரசனின் பேர் காணப்பட்டிருந்தது. அது அவரிடம் வந்து சேர்ந்த காலத்தில் அரசனிடத்திலிருந்து நீங்கி 182௵ ஆயிற்றென்று அறியலாயிற்று. இதனால் கழுகுக்கு எவ்வளவு ஆயுள் விருத்தியுண்டென்பதை நாம் தெளிவாய் அறிகிறோமல்லவா? மாமிச பட்சிணியாகிய காக்கை 100௵ ஜீவிக்கக் கூ[illegible] தென்றும், அன்னம், கிளி முதலிய பட்சிகளும் ஜாஸ்தி வயதுள்ளவைகளென்றும் தெரிகிறது. மேலும் எவைகளின் மாமிசம் அழுத்தமும் கருநிறமுமுள்ளதாயிருக்கிறதோ அவைகளுக்கு நீண்ட ஆயுள் பொருந்தியிருக்கிறது. இதற்குச் சாட்சியமாக ஏற்கனவே கறுப்பு நிறமும் அழுத்தமுமுடைய மாமிசம் உள்ள காக்கை, கிளிகளுக்கு வயது ஜாஸ்தியென்பதாய்த் தெரியக் காட்டியிருக்கிறோம். மயில், கரிக்குருவி, தகைவிலான் குருவி முதலிய பறவைகள் 20௵ காலம் ஜீவித்திருக்கக் கூடுமென்பதாகச் சொல்லப்படுகிறது.



இதை இம்மட்டோடு நிறுத்தி, நாலுகாற் பிராணிகளாகிய மிருகங்களின் ஆயுளைப்பற்றி இனி விசாரிப்போம். எல்லாப் பிராணிகளிலும் பெரிதானதும் மெதுவாய் வளரக் கூடியதும் பலமாகிய தோலையும் தந்தத்தையுமுடைய யானைகளே மிகுந்த ஆயுளுள்ளவைகள்; சிங்கம், கரடி, ஒட்டகம், குதிரை முதலியவைகள் படிப்படியாகக் குறைந்த ஆயுளுள்ளவைகளாயிருக்கின்றன. பொதுவாய்க் கொம்புடைய விலங்குகளுக்கு கொம்பில்லாத மிருகங்களை விட ஆயுள் குறைவாயிருக்கிறது. மாடுகளின் வயது 15 முதல் 20௵ வரையிலும் ஆடு முதலியவைகளின் ஆயுள் 7 முதல் 10௵ வரையிலுமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பிராணி வர்க்கங்களுக்குத் தாவர வர்க்கங்களைப் போல மிகுந்த வன்மையில்லாதிருந்த போதிலும் அவைகளுக்கு ஜாஸ்தி வயது நிலைபெறுவதற்குக் காரணம் பின் சொல்வதைக் கொண்டு எளிதில் விசதப்படும். அதாவது தாவரங்களுக்கு வன்மையிருப்பதினாலன்றோ அவைகள் நிலை பெயராமலேயே சீதோஷ்ணத்தைப் பொறுத்துக் கொள்ளவும், பூமியை அவைகளின் வேரினாற் பிளந்து ஆகாரத்தையும் ஈரத்தையும் கிரகித்துக் கொள்ளவும் சக்தியுடையவைகளாயிருக்கின்றன. பிராணிகளுக்கு அவ்வளவு பலத்தைக் கடவுள் அமைக்காத காரணம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கருவி கரணங்களினாற் றங்களுக்கு உணவைச் சம்பாதித்துக் கொள்ளவும் தங்களின் முயற்சியால் தங்களுக்கு சீதோஷ்ணத்தினால் சரீரத்திற்கு ஹானி நேரிடாதபடிக்குத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவுங் கூடிய நிலைமையை அவைகளுக்குக் கொடுத்ததே.

பிராணிகள் எவ்வளவு சீக்கிரத்தில் கருப்பத்தில் ரூபத்தை யடைந்து ஜனிக்கின்றனவோ அவ்வளவுக்கு ஆயுள் விருத்தி குறைவுபடுமென்று தெரிகிறது. இதுவே இயற்கையின் பொதுவான விதியாயிருக்கிறது. மூன்று வருஷ கருப்பமுள்ளதாகச் சொல்லப்படுகிற யானைகளுக்கு ஜாஸ்தி வயதேற்படுவதற்கும் 6, 8 மாத கருப்பமுள்ள ஆடு மாடுகளுக்கு வயது குறைவுபடுவதற்கும், அதிலும் தாழ்மையாக 2, 3 மாதங் கருவுடைய நாய்களுக்கு ரொம்பவும் ஆயுட் குறைவுபடுவதற்கும் காரணம் இதுவே!

பிராணிகளுடைய சரீரத்தின் சருமத்தினுடைய ஓர் விசேஷமான அமைவும் ஒருவாறு ஆயுளை விர்த்தி செய்கிறது. பட்

சிகளின் தோல் ஆயுள் விருத்திக்கு அனுகூலமாக சிருஷ்டிக்கப் பட்டுள்ளதால் அவைகளுக்கு நீண்ட ஆயுள் நிலை பெற்றிருக்கிறது. யானை முதலை முதலிய மிருகங்களுக்கு வயது குறைவில்லாமலிருப்பதற்குக் காரணம் அவைகளின் தோல் மிகுந்த கடின முடையதா யிருப்பதென்றே. இதுவு மன்றியில் சலனம் அல்லது அசைவு ஒருவாறு ஆயுளைப் பெருக்கக்கூடியதா யிருக்கிறது. ஓட்டம் என்னும் முயற்சியானது ஆயுள் விருத்திக்கு ஹானியுள்ளதாயும் ஏற்கனவே சொல்லப்பட்டுள்ள முயற்சியோடு கூடிய சலனத்தையும் அதல்லாத சலனத்தையும் ஒருங்கே பெற்றுள்ள பிராணிகளுக்கு வயது ஜாஸ்தியென்று மேற்படுகிறது. (இரண்டு சலனமும் சேர்ந்தது பறத்தல்; நீந்துதல் முதலியன.

எந்தப் பிராணிகளுக்கு கருவி காரணங்கள் ஒழுங்காயமைந்திருக்கிறதோ அவைகளுக்கு அவயவக்குறைவுபாடுள்ள அவயவப் பிராணிகளைவிட ஆயுள் குறைவு என்பதையும் ஏற்கவே சொல்லி யிருக்கிறோம். இன்னமும் (1) தாவரவர்க்கத்திற்கும் ஜீவவர்க்கத்திற்கும் நெருங்கிய சம்பந்த முள்ளதாகச் சொல்லப்படுகிறதும், வாய், வயிறு, இரைக்குடல் ஆகிய இவைகள் மூன்றையுமாத்திர முடைய (zoophytes என்னும்) ஒருவகைப் பிராணிகளுக்கு ஜாஸ்தியான வயதும் எளிதில் மரணதெசையடையக் கூடாத தன்மையும் ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. (2) குளிர்ந்த இரத்தத்தையுடைய பிராணிகள் உஷ்ண இரத்தமுள்ள பிராணிகளைவிட நீண்ட காலம் ஜீவித்திருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. மேலும் சுவாசாசயத்தையுடைய பிராணிகள் அதையில்லாத ஜீவிகளைப் பார்க்கிலும் குறைந்த வயதுடையனவாயிருக்கின்றன.

(இன்னும் வரும்.)

S. குமாரசாமி மேற்கொண்டார்.

# நியாயம் அல்லது தர்க்கமும், வைசேஷிகம் அல்லது பரமாணு வாதமும்.

(48-ம் பக்கத்தொடர்ச்சி)

சாங்கியத்துக்கு யோகசாஸ்திரம் எப்படியோ அப்படியே நியாயத்திற்குக் கணாதருடைய பரமாணுவாதம் விவரணையா யிருக்கிறது (என்று தெரிந்திருந்ததால்) நாம் அவ்விஷயத்தைக் குறித்து விஸ்தாரமாய் பிரசம்சை செய்யவேண்டுவதில்லை. பிரகிருதி சம்பந்தமான எவ்வெப் பதார்த்தங்களும் பரமாணுக்களின் தொகுதி என்பது கணாதருடைய முக்கிய சித்தாந்தம். இப்பரமாணுக்கள் அநாதியாதலால் இவற்றின் தொகுதிகள் மாத்திரமே தளர்ச்சியால் அழியக்கூடியது.

சூரிய கிரணத்தில் மிதக்கும் ஒரு சிறு துகள்தான் பார்க்கக் கூடியவற்று ளெல்லாம் சிறியவஸ்து. வ்யணு என்று பெயர் பெற்ற மாத்திரத்தாலே, இது காரணத்தின் காரியமென்றும், தன்னிலும் சிறிய பகுதிகளாலாக்கப்பட்டது என்றும் பெறப்படும். (ஆதலால்) கடைசியாகப் பகுக்கப்பட்டு நிற்கும் பரமாணுவே தொகுக்கப்படாததும் தனியாய் நிற்பதுமாம்.

முதல் முதல் உண்டாகும் தொகுதி இரண்டு அணுக்கள் சேர்ந்து உண்டாவது. அதற்கடுத்தது (மேற்கூறிய) இரட்டை அணுக்கள் மூன்று சேர்ந்தாவது. இதற்கு மேற்பட்ட தொகுதிகளும் இவ்வாறுளவைதான். ஆதலால் முன்னுதகரித்த சூரியகிரணத்தில் காணப்படும் துகள் ஆறு பரமாணுக்களின் தொகுதி. அணுக்கள் தத்தமிடைக்கட் புணர்ச்சியாக் காரணத்தால் சார்புண்டு இவ்விரட்டை அணுக்களாகின்றன என்று, "பரமாத்மா ஒருவருளர், அவர் சங்கல்பமொன்றுண்டு" என்று கொள்ளாத கணாத சித்தாந்தத்தில் இரட்டையணுக்கள் உண்டாவதற்கு காரணம் பகுத்துள்ளது. மூன்று இரட்டையணுக்கள் சேர்ந்ததோர் முக்கை அணு; நான்கு முக்கையணுக்களின் தொகுதி ஓர் நாக்கைகயணு, என்று இவ்வாறு தொகுப்பினால் பிரகிருதியிலுள்ள வஸ்துக்கள் ஸ்தூலம் ஸ்தூல

மாய் வளர்ந்துவருகின்றன. மேற்குறித்தவாறு (பிருதிவி யணுக்களால்) இப்பெரும்பூமியும்; ஜல அணுக்களினாலே (சமுத்திர முதலிய) ஜல சமூகங்களும், தேஜசின் அணுக்களால் (ஸோமசூரியாக்கினி முதலிய) சோதிகளும், வாயு அணுக்களால் வாயுக்கூட்டமும் உண்டாக்கப்படுகின்றன.

காணாதத்தில் (ஒப்புக்கொள்ளப்பட்ட) பதார்த்தங்கள் ஆறு* (ஏழு.) அவைதாம், (1) திரவியம், (2) குணம், (3) கர்மம், (4) சாமான்னியம், (5) விசேஷம், (6) சமவாயம், (7) அபாவம் என்பன.

இவற்றில் முதல் பதார்த்த(மாகிய திரவியம்) காணாதத்தில் ஒன்பது வஸ்துக்களாகும்; அவையாவன:—அநாதியான பரமாணுக்கள்கூடி யுண்டாகி, அழியத்தக்க தொகுதி ஸ்வரூபியான பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்பன. அடுத்தது ஆகாசம். இது சப்தத்தை (தன்னுட்) கொண்டு செலுத்துகிறது. அணுக்களால் ஆனதன்று. ஏகாண்டமாய்ப் பரவியுள்ளது; ஒன்றாயுள்ளது; சாச்வதமானது. கபில (சாங்கியத்திற்போல) கணாதருடைய (பரமாணுவாதத்திலும்) சப்தத்தைத் தாங்கிச்செல்வது வாயுவன்று என்றும், வாயுவினும் சூக்குமமான ஆகாசமென்னும் ஒரு பதார்த்தமென்றும் கூடமாய் ஏற்படுகிறது. (ஆகாசத்தைப்போலவே) காலமும், தேசமும் (அல்லது இடமும்) பிரகிருதி சம்பந்தமானவையன்று; ஆதலால் பரமாணுக்களால் ஆனவையன்று. இவையும் ஏகாண்டமானவையும், ஒன்றாயிருப்பவையும், நித்யமானவையும் ஆம். கடைசியிரண்டு வஸ்துக்கள் ஆத்மாவும் அந்தக்கரணமாயிருக்கிற மனசும்.

இரண்டாவது பதார்த்தமாகிய குணம் பதினேழுவகைப்படும். இவை முற்கூறிய ஒன்பது வஸ்துக்களின் குணங்களைக் குறிக்கின்றன. இக்குணங்களாவன:—ரூப, ரஸ, கந்த, ஸ்பர்ச, சங்கியை, பரிமாண, பிருதக்த்வ, ஸம்யோக, விபாக, பரத்வ, அபரத்வ, புத்தி, சுக, துக்க, இச்சா, த்வேஷ, பிரயத்ன மென்பவை. தேஜோஷ்ணங்கள் ஒரே பதார்த்தத்தின் வேறுபாடுகளே என்று கொள்ளப்படுகிறது. ஆகாசம் சப்தத்துவமுடையது. மனசு (ஆகிய அந்தக்கரணமானது) பரமாணுவைப் போல் அதிநுட்பமானதென்று நம்பப்படுகிறது.

* 'ஆறு' என்று கூறப்பட்டுள்ளது. ஆயினும் அது 'ஏழு' என்று இருக்கவேண்டுமென்று தோற்றுகிறது.



மூன்றாம் பதார்த்தமாகிய கர்மம் ஐந்துவகைப்படும்: உத்க்ஷேபணம், அவக்ஷேபணம், ஆகுஞ்சனம், பிரஸாரணம், கமனம் என்பன.

சாமான்னியம் என்னும் நான்காவது பதார்த்தமே இனம் (கூட்டம்) என்னும் ஞானத்தையுண்டுபண்ணுவது. பல வஸ்துக்களுக்கும் பொதுவாயுள்ள குணங்களைக் குறித்தலோடுங்கூட, (இவ்வினத்தினுட்) பகுதிகளையும் குறிக்கின்றது. இவ்வினங்களும், (அவற்றின்) பகுதிகளும், வாஸ்தவ்வியமாய் இருக்கும் தன்மையன என்னும் சித்தாந்தம் கணாதருக்குண்டு. இது பௌத்தர்களுக்கில்லை. பௌத்தர்கள் தனித்தனியாய் வஸ்துக்கள் உள்ளனவேயன்றி (கூட்டம், தொகுதி என்னுமாப்போன்ற) தன்மை உண்டென்பது தப்பு என்று நம்புகிறார்கள். இதுதான் மத்திய காலத்திய தார்க்கிகர்களால் 'வாஸ்தவ்வியம்' 'நாமயம்,' என்னும் சித்தாந்தங்களில் திரும்பக்கிளப்பிய சண்டைகள்.

விசேஷம் என்னும் ஐந்தாம் பதார்த்தம் சேர்க்கையற்ற தனி வஸ்துக்களை உணர்த்துகிறது. அவைதாம், ஆத்மா, மனது, காலம், இடம், ஆகாசம், பரமாணுக்களாகும்.

ஆறாவது பதார்த்தம் கௌதம நியாயத்தில் கூறும் சமவாயம் அல்லது சேர்க்கை என்பது. இது நூலும், (அதனாலாகிய) துணியும் போன்று இரண்டு பொருட்களுமுள்ளளவும் கூடியிருக்கும் சேர்க்கை.

அபாவம் என்னும் ஏழாவது பதார்த்தம் தனித்தும் அடுத்தும் இருக்கலாம்.

இதுகாறும், மேற் சுருக்கமாய்க் காட்டியமட்டும் வைசேஷிகம் தன்னில் பௌதிகசாஸ்திரமிருந்தும் தர்க்கசாஸ்திரம் குறைந்திருத்தலால் புதுமையாகத் தோன்றுகின்றது. இந்தியாவில் (இக்கணாதர்தான்) முதன்முதலாய் (பிரகிருதிசம்பந்தமான) பதார்த்தங்களின் தொழில்களையும் சக்தியையும், இவைகளின் சேர்க்கையையும், பிரிவினையையும் பற்றி விசாரஞ் செய்யத்தொடங்கியமதம்.

வேதாந்தம் ஒழிந்த மற்றெல்லாவிந்து மதங்களும் பிருகிருதி அநாதிகாலத்ததென்றும், ஆத்மாவினும் வேறு என்றும் கொள்கின்றன. வேதாந்திகளோவெனின் பிருகிருதியெல்லாம் ஒரு பரமாத்மாவின் தோற்றம் என்றும் இப்பரமாத்மா தன்னுள் சகலத்தையுமடக்கியவரென்றும், சகலமும் தானேயாகியவரென்றும் நினைக்கிறார்கள். இவ்வேதாந்தத்தைப்பற்றி அடுத்த அதிகாரத்தில் கூறுவோம்.

T. A. கோபிநாதராவ், M. A.

# மதுபானம்.

கள், அபின், கஞ்சா, புகையிலை முதலிய வெறிப்பொருள்கள் பொதுவகையாற் "குடி" எனப்படும். இவைகளே நம் பரத கண்டவாசிகளாற் றொன்றுதொட்டுப் பயிலப்படுவன. இவையல்லாத "பிராண்டி" "விஸ்கி" "ஜின்" முதலிய வெறிநீர்ப் பொருள்களும், காப்பி, தேயி, சொக்கலேற் முதலிய வெந்நீர்ப் பொருள்களும், "லெமனேட்" "சோடா" "டொனிக்" முதலிய தண்ணீர்ப்பொருள்களும், நாகரீகத்தில் மேம்பட்டவரென நம்மவரால் மிக நயந்து வியந்து போற்றப்படுவராகிய ஐரோப்பியர்கொணர்ந்த "பால்போலத்தோன்றிப்பருகினாரைக்கொள்ளு-மாலை நீர்மைத்" தாகிய சீர்திருத்தக்குடிகளாகும்.

முற்காலங்களிலே நம்மவருள்ளும் பெரும்பான்மை பள்ளர் முதலிய இழிமக்களும், சிறுபான்மை உயர்குலத்திற்பிறந்தும் ஒழுக்கத்திற்குறைந்த இழிமக்களுமே இம்மதுபானஞ்செய்தவராவர். இக்காலங்களிலோ, கற்றவர் கல்லாதவர், உயர்ந்தவர் தாழ்ந்தவர் ஆகியசகலருள்ளும், சிலர் அந்தரங்கத்தில் நுகர்ந்தும் "உள்ளொற்றியுள்ளூர் நகப்படுவரெஞ்ஞான்றுங், கள்ளொற்றிக் கண்சாய்பவர்." என்றபடி அவர்கொண்ட தளர்ச்சியாற் களிப்பும், அக்களிப்பினால் கள்ளுண்டமையும் அறிந்து பிறராற் பழிக்கப்படவேதோடு பாவத்துக்குமாளாகின்றனர். பலர் பகிரங்கமாக நுகர்வதுமன்றி மதுவுண்ணாதோரை "லோபிகள்" "சீர்திருந்தாதவர்கள்" "வைதிகர்" "நாட்டார்" என எள்ளவும் பண்ணுகின்றனர்.

இவ்வெறிப்பதார்த்தங்கள் அறிவை மயக்குங்குணமுடையன. மதுபானஞ்செய்தோர்க்கு மனமொழிமெய்கள் தம்வசப்படாமையின் நற்குண நற்செயல்கள், நாணம், நல்லறிவு, தெய்வவழிபாடு, தேகசௌக்கியம், புகழ், புண்ணியம், பொருள் முதலியன நீங்கித் தீக்குணத்தீச்செயல்கள், மறதி, பழி, பாவம், பிணி, வறுமை முதலியன மேலிடும். பொருளைக்கொடுத்துப் புகழ்புண்ணியத்தோடு அருளும் விலையாக்கி அஞ்ஞானம்பெறுது பழிபாவத்தோடு மருளும் வினையும் மதுபானம்பெறுதல் எவ்வளவு மதியீனம்!

"கையறியாமையுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறியாமை கொளல்." என்பது சுருதி.



"ஈன்றாண்முகத்தேயுமின்னாதாலென்மற்றுச்
சான்றோர்முகத்துக்களி." —குறள்.

மதுவருந்தினோர்க்குக் கரணங்கள் தம்வயத்த வன்மையான் வெட்கமுதலியனவொழிந்து களிப்புங்காமமுமிகுந்து நினைவு தெரியாது களியாட்டினால் யாதுசெய்யினும் பொறுக்குமாதாவும் அவரை அருவருத்துத் தள்ளுவராயின் குற்றஞ்சிறிதும் பொறுத பெரியார் யாதுசெய்வர்! இயல்பாகவே பிரபஞ்சமாயையில் மயங்குவோர் அதன்மேல் மதுமயக்கமுங்கொள்ளல் ஏழைமைப்பான்மையல்லா?

"ஏயினவிதுவல்லன்மற்றேறுமைப்பாலன்றோ
தாயினன்மனைவியென்னுந்தெளிவின்றேற்றுதுமென்னுந்
தீவினையைத்தினென்றுமன்றியுந்திருக்குநீங்கா
மாயையின்மயக்குகின்றமயக்கின்மேல்மயக்கும்வைத்தாம்"
என்பது கம்பர்வாக்கு.

நாடோறும் எத்தனையோ குடியினர் அறிவழிந்து, உடையழிந்து, நாணொழிந்து கண்டோரெவரும் பரிகசிக்கத் தெருக்களிற் புரளுவதைக்கண்டும், ஒருவன் மதுவைத் தள்ளாதொன்பது எவ்வளவோ அறியாமை!! மிகப்பெருஞ்செல்வனேயினும் ஒருவன் மதுபானஞ்செய்யப்பயில்வனேல் அதுகாரணமாக அவன் கைப்பொருளெலாமிழந்து வறிஞனாய்ப் பொருள்வேண்டிக் களவும், களவுசெய்தலைப்பிறர்கண்டவிடத்து அதனை மறைத்தல்வேண்டிப் பொய்யும், களவுசெய்யும்போழ்து தடுப்பவர் எழுவரேல் அத்தொழிற்குப் பங்கம் வருமாதலின் அத்தடுப்போரை முன்புகொன்று பின்பு களவை நடாத்துதலிற்கொலையும், களிப்புமேலிட்டாற் காமமுஞ்செய்தலின் மற்றைப்பாதகங்களெல்லாவற்றுள்ளும் கள்ளுண்ணலாகிய பாதகமே தலையாயது.

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்." என்றபடி கள்ளுண்டவர் நஞ்சுண்டவரேயாய் நஞ்சுண்டவரிறந்ததன்மையின், கள்ளுண்போரது மனைவியர் கணவனிருந்துங் கைம்மையேயாவர்; மக்கள் பிதாவிருந்தும் இல்லாதவராவர்.

தெருக்களிற் புரண்டும் வாய்க்கால் சாக்கடைகளில் உருண்டும் இம்மையிலேதானே இப்பெருந்துன்பமடைதலைக் கண்ணாரக் கண்டோம், இவர்களின் மறுமைப்பயன் என்னோவென்றெண்ணவும் வேண்டுமோ?

இக்குடியரும் உயர்குடியர் தாழ்குடியரென இருதிறப்படுவர். அவருள் தாழ்குடியர் குலத்தாலும் இனத்தாலும் குணத்தாலும் பணத்தாலும் கல்வியறிவாலும் தாழ்ந்தவர். உயர்குடியர் குலத்தாலும் பணத்தாலும் கல்வியினாலும் நாகரீகத்தாலும் உயர்ந்தவர். தாழ்குடியர்பயில்வது தோற்றத்திலுயர்ந்தவாயினும் விலையின் மிக்குறைந்த தென்னை பனை முதலியவற்றின் மதுவகையே; உயர்குடியர் தம்முயிர்போற்பயில்வது ஐரோப்பியர்களுடைய விலையுயர்ந்த பிராண்டி முதலிய உயர்குடியே. தாழ்குடியர் தம்மினப்பழக்கத்தாலும் "குடித்தல் குற்றம்" என்றிடித்துரைப்பாரின்மையாலும் புண்ணியபாவ மின்னதென்னு முணர்வின்மையாலும் குடிப்பர்; உயர்குடியர் பலதேச சஞ்சாரத்தாலும் பலசன சகவாசத்தாலும் சிலகுடியரின் நல்லனபோன்ற துன்மதியாலும் வீரியவிருத்திக்கென்றும் வியாதிநீக்கத்திற்கென்றும் மனவூக்கத்திற்கென்றும் ஏகாக்கிரசித்தத்தோடு பரம்பொருளைத்தியானித்தற்கென்றும் சத்திபூசைக்கென்றும் பாவிப்பர்.

குடிவகை சாதாரண பாவிப்புக்கு எவ்வாறு கூடாதோ, அவ்வாறே மருந்துக்கும் கூடாதென வைத்தியர்கள் பிரசித்தப்படுத்தியிருக்கின்றனர். "மதுபானம் சிறிதாயினும்கூடாது; அது சீரணப்படுத்துங்கருவியைவிரைந்து பெலவீனப்படுத்துகின்றது. ஊக்கமுண்டாதற்பொருட்டும் அதனைப்பாவித்தல் கூடாது" என்று எமதரசரின் இராண வைத்தியர் (Sir Frederick Treves என்பவர்) கூறுகின்றார். நம்மவர்கள் வியாதிநீக்கத்தின்பொருட்டும் ஊக்கத்தின்பொருட்டும் கரும்புபோல்விரும்பியருந்துகின்றனரே!

உள்ளுண்மையோரா துணரார் பசுபாசம்
வள்ளன்மை நாதனருளினின் வாழ்வுறார்
தெள்ளுண்மைஞானச் சிவயோகந் சேர்வுறார்
கள்ளுண்ணுமாந்தர்கருத்தறியாரே.—திருமூலர் திருமந்திரம்.

சத்தியைவேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்
சத்தியழிந்தது தம்மைமறத்தலால்
சத்தி சிவஞானந் தன்னிற் றலைப்பட்டுச்
சத்தியஞானவானந்தத்திற்சார்தலே. என்னும் முதுமொழி.

மதுவுண்டமாத்திரத்தே "மனநிலை தடுமாறி வரவர மருளேறி, கனவெனமொழிசோரக் கலையொடுநிலைசோரத், தனியொருதுணையாகத் தரைமலரணையாக, வினைவயர்விலதாலே நிறையழிவினர்போல," இடக்கும் அவசரத்தில் இவர்க்கு ஏகாக்கிரசித்த



மும் கடவுட்டியானமும் எவ்வாறு வாய்க்குமோ? திரிகரணசுத்தியற்றுக்கிடக்கும்போது சத்தியேது? பூசையேது? இக்குடிகாரர் தங்கட்கேயனுகூலமாகத் தெரிந்தெடுத்த இத்தந்திரந்தனை வாமதந்திரத்திற்றான் காணப்படும்போலும்.

முன் அழுக்காயிருந்த எவரும் விரும்பாத வஸ்திரத்தில் பின்னும் அழுக்கேறுமாயின், அஃதெவ்வேளை அழுக்கென அருவருத்தொதுக்கப்பட்டமையின் மேலழுக்கேறினமை கவனிக்கப்படாததுபோலவும், சுத்த வெள்ளை வஸ்திரத்திற் புதிதாய் அழுக்கேறுமாயின் அது பிறராற் கவனிக்கப்பட்டு அவ்வழுக்கு வஸ்திரத்தோடொக்கப் புறக்கணிக்கப்படுதல்போலவும், தாழ்ந்தவர் குடித்தல் பிறரா லறியப்பட்டும் கவனியாது ஒதுக்கப்பட்டும், உயர்ந்தவர் குடித்தால் "கன்றிமுதிர்ந்த கழியப்பன்னூட்செயினும், ஒன்றுஞ்சிறியார்க் கொன்றுந்தோன்றாவாம், ஒன்றுயர்ந்தார்படுங்குற்றம், குன்றின்மேலிட்ட விளக்கு" (பழமொழி.) என்றபடி பிறராற் பெரிதுங்கவனித்திகழப்படுவதுமாகும்.

சதுர்த்தரான சூத்திரர் மதுவுண்பாரேல் அவரே பெரும் புலையர்; வைசிய க்ஷத்திரியருண்பரேல், அவர் அப்புலையரினுங் கடையர்; எனின் பூதேவராய முன்னவர் அருந்தல் முறையாமா? இவர்க்கு அதோகதியன்றி வேறென்னாகும்?

இம்மதுபானமானது, பிறவிப் பெருங் கடலில் வீழ்ந்து வருந்துவோரைத் தவவரம்பி லேறவொட்டாது உள்ளழுத்துஞ் சுழியாகும்; அறிவாகிய வெளிக்கு இருளாகிய படன்மறைப்பாகும்; இழிவாகிய மிகக் கொடிய நரகிலழுத்திச் செலுத்துந் தோட்டியாகும்; முத்திநெறியை யடைக்குங் கபாடமுமாகும்.

ஒருவன் கள்ளுண்பவனைக் கண்டாலும் அவனோடு பேசினாலும் பெரும்பாவமேயாயின், கள்ளுண்டவரை யுண்பித்தவரும் கள்விற்றவரும் கள்ளுண்பவரோடு பழகினவரும் நரகத்துன்பத்தையடைவர் என்பது தாற்றுணிபு. இவற்றைப் பின்வரும் பாக்களாலுணர்க.

"வண்புலையர் மதுதுகர்ந்தார் மாகடையின் மாசெனப்போம்
பண்புடையா னுயர்குலத்தான் மதுவுண்டபான்மையினால்
வெண்புடவை தனிலழுக்கு விரைந்தேறும்படி பிறருங்
கண்புதைப்ப வுருவழிந்து கருமதிபோற் கறையடைந்தான்."

"பின்னவரும் பாலவரே பெரும்புலையர் வணிகரொடு
மன்னவரு முண்டாரேன் மற்றையவரி லுங்கடையர்
முன்னவர்க்கே யவையர்கி லம்புவிக்குங் கடவுளரா
முன்னவர்க்கு மதுவருந்தன் முறைமையோ மடமையாய்."

"தீருப்பலக்கடலின் விழுந்தாரைத் தவரம்பி
வெறுமலமுந் தக்காறி யறிவுவெளிக் கிடப்படவர்
தூருய கோரகோ வெழுந்திவிடத் தொட்டுகுத்தி
பெருன வழிபடைக்குங் கதவமே பெருநறவுன்."

"எவ்வமுறா றுகர்ந்தாரை யெம்புவதென் றுங்கவரைக்
கவ்வையுறப் புகின் றுங்கண்டாலும் பெரும்பாவம்
மெய்வளரு நெறியோர்கள் விலக்குவது விலக்காத
பொய்வழியை விரும்பினரும் விரும்பாத புலைமதுவே."

(திருக்குற்றாலத்தலபுராணம்.)

இனி, புகையிலையைப்பற்றிச் சிறிது சொல்லி முடிப்பாம். புகையிலையுங் குடிவகையென முன்புதாமே சொல்லியிருக்கின்றோம். புகைக்குடி பெரும்பான்மையும் அநாசாரத்தையும் அசௌக்கியத்தையும், ஜடாக்கினித்திண்மை, வறட்சி, பெலவீனம், நாசுவேட்டம் முதலிய துன்மைகளையே விளைக்குமென்பது யுக்தி யநுபவங்களாற் கண்டவுண்மை.

மருந்தைமுறித்துவிடும் வாய்வறளச்செய்யும்
திருந்து பெலவீனஞ்சேர்க்கும்—பொருந்துபித்தம்
உண்டாக்கும் விந்தழிக்கு மோதுபுகையிலை
கண்டார்க்கு மாகாதுகாண்.

கண்புகையு நெஞ்சுலருங் கைகாலெரிந்துவிடும்
விண்பெரியமேனி வெளுத்துவிடும்—திண்புவியில்
சுரக்கும்விந்து மிகத் திரிந்துவிடுமாம்
பாரப்புகையிலையின் பண்பு. (பதார்த்தகுணசிந்தாமணி.)

ஆதலின் சுருதி யுக்தி யநுபவங்கட்கு முரணாமாறுகவுள்ள மதுபானத்தைத் தொலைத்தல் கடைப்பிடித்தல், அதனை விரும்புமவர்க்கும் பொருத்த முடைத்தாகும்.

திரு. சோமசுந்தரம்பிள்ளை,
யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலி.

# கோவிலின் வெளிப்பிராகாரம்.

## முதல் உபந்நியாசம்—தூய்மை.

(தொகுதி 1, 115-ம் பக்கத்தொடர்ச்சி.)

மலைமுடியிலுள்ள கோவிலின் வெளிப்பிராகாரத்தை நோக்கி அனந்தகோடி ஜனங்கள் அம்மலையைச் சுற்றிச் சுற்றிப்போகும் பாதையின் வழியே செல்லுகிறார்கள் என்று சொன்னோம். ஆயினும் கோவிலின் வெளிப்பிராகாரத்திற்குப் போய்ச்சேர வேறு பாதைகளும் உண்டு. அந்தச் சுழன்ற பாதையில் எவ்விடத்திலிருந்தாகிலும் வெளிப்பிராகாரத்திற்கு நேரே போய்ச்சேரலாம். இந்தப்பாதை சுழன்று சுழன்று செல்லும் பெரிய பாதையைப் போலல்லாமல் மலையின் செங்குத்தான பாரிசத்தை யணைந்து செல்லுகின்றது. ஆதலின் இந்தப்பாதை வழியே போதல் மிகவும் சிரம சாத்தியம். திடசித்தமுள்ள ஒரு மனிதன்தான் இந்த வழியாகப்போகலாம். கைகால்கள் வலுவுள்ள ஒரு பிரயாணிக்குத்தான் இந்தவழி சுலபம். பலகோடி ஜனங்கள் அடியளந்துகொண்டு சுற்று வழியாய்ப் பிரயாணம் போகையில், இந்தத்தொ[illegible]த வழியைவிட்டுக் குறுக்குப்பாதையில் அடிவைத்து நடக்கின்றவர் யார் என்று கவனித்துப் பார்ப்போம். இவர்கள் சுற்று வழியில் கடப்பதற்றாக் குறுக்கு வழியில் காலெடுக்கிறார்கள். கணக்கிறந்த காலம் அந்தத் தொலையாத வழியில் கடந்து களைத்துப்போனார், பாவம்! ஜன்மகோடிகளும் அவ்வாறே கழிந்தனபோலும். "இந்த வழி நமக்கு ஏற்காது" என்று கடைசியாய்த் தீர்மானஞ் செய்துகொண்டு மலை முடியை அண்ணாந்து பார்த்துச் சிகரத்திலுள்ள கோவிலை ஒரு நொடியேனும் கண்டுகளித்து, "அதனையல்லவோ நாம் நோக்கிச்செல்கின்றோம்" என்று கருதிச் சுழன்ற வழியை வெறுத்துத் திடசித்தத்துடன் இவர்கள் குறுக்குப்பாதையில் கால் வைக்கின்றனர். சிகரத்திலுள்ள கோவிலிலிருந்து ஒருஜோதி இவர்கண்முன் ஒரு நிமிஷம் பிரகாசிக்கின்றது. தடுத்தாட்கொள்ளும் ஒருவன் அம்மலைச்சிகரத்து வெண்மையான கோவிலிலே வீற்றிருந்து தன் ஜோதியின் கிரணங்களை ஓயாது சதாகாலமும் வீசிக்கொண்டிருக்கிறான். தொலையாத வழியிற்செல்லும் பிரயாணிகள் வழியிலுள்ள புஷ்

பங்கள், பாக்கள், வண்ணாத்திப்பூச்சிகள் முதலான அனித்தியமான வஸ்துக்களைக் கண்டுமகிழ்ந்து அவைகளுடன் நின்று பொழுதுபோக்குங் காலத்தில், ஒருசமயம் அவர்கள் மலைமுடியை அண்ணாந்து பார்க்கமாட்டார்களா? அவ்விதமான ஒரு சமயத்தில் கோவிலிலிருந்து வந்த தேஜசின் கிரணம் அவர்கள் கண்களைப்பறிக்க, அப்போது அவர்கள் கோவிலை நோக்குகிறார்கள். ஒரு நிமிஷம் ஜோதியைக் கண்டுகொள்ளுகிறார்கள். கண்டதும் அவர்கள் தன்மை அந்த நிமிஷத்திலேயே மாறிவிடுகிறது. அனித்தியப்பொருள்களை விரும்பியலைந்த அவர்கள் தாங்கள் சென்று சேரவேண்டிய கதியையும் முடிவையும் அறிகிறார்கள். தாம் ஏறும் மலைச்சிகரத்தின் உயரத்தையும் அம்மலைச்சிகரத்துக்குப் போய்ச்சேரும் ஒற்றையடிப்பாதை கிட்டமாயினும் குறுகலென்றும் செங்குத்தானதென்றும் அறிந்துகொள்ளுகிறார்கள். இந்தக் குறுக்குவழியே சென்றால் எவ்வளவு தூரம் வளைந்து ஒவ்வொரு வளைவிலும் எவ்வளவு தூரம் சுழன்று வலம்புரிச் சங்கின் வாய்போற்பின்னுந்தொலையாத வழிப்பிரயாணம் வேண்டாமென்றும் அறிகிறார்கள். இவ்விதம் தமது கதியையும் கதியின் வழியையுமறிந்த இவர்கள் இவ்விதம் தாம்படக்க நினைத்த கத்திமுனையினையு குறுகிய வழியின் பெயரையும் கண்டுகொள்ளுகிறார்கள். இக்குறுக்குவழியின் பெயர் "சேவகம்" என்பது. இக்குறுக்குவழியில் கால்வைக்க முயல்பவர்கள் "மானிடருக்குச் சேவகம்" என்னும் ஒரு துவாரத்தின் வழியாக நுழைந்து உள்ளே வரவேண்டும். அத்துவாரத்தின் தலைமுகப்பில் "ஜீவகோடிகளுக்குச் சேவகம் புரியவேண்டும்" என்ற வார்த்தைகள் தங்கவெழுத்துக்களால் வரையப்பட்டுள்ளன. அதனைக்கண்டு திடசாலிகளாகிய சிலர் நன்குமதித்து வெளிப்பிராகாரத்திற்குச் செல்லும்வழி இதுவே என்றும், வாழ்நாள் சேவகம் செய்வதற்கே என்றும்; ஆத்மலாபத்திற்கல்லவென்றும்; தாம் சீக்கிரம் மலைமுடியை ஏறிப்போதல் விட்டு தயங்கித் தாங்கி வரும் மனிதகோடிகளுக்கு உதவி புரிவதற்காகவென்றும், கோவிலைச்சென்று சேர்ந்தால் அங்கிருந்து ஏழைகளுக்குச் செம்மையான உதவியை அனுப்பலாமென்றும் நினைக்கிறார்கள். இவ்வாறு இவர்கள் நினைப்பது ஒரு நிமிஷமே ஆயினும் அருகு! சுவையினைக் கண்டார் பிறகு அச்சுவையினை மறப்பார்! ஒரு நிமிஷம் இந்தச்சாத்விக நினைப்பு வந்தது, பிறகு அறியாமை மூடிக்கொண்டது,



என் செய்வார்கள், பாவம்! இவர் மலைமுடியிற்கண்டது அகண்டமான பரிபூரணத்தையல்ல. அதனையே கண்டால் விடுவார்களா? சித்சுருபியின் ஓர் அம்சத்தை மாத்திரமே கண்டார்! பாவம்! பிறகு இவரது ஜன்மவாசனைக்கினிய பொருள்களைக் குறுக்குவழியிற்கண்டு மறுபடி நிலைபற்று மயங்கித் தடுமாறுகிறார்கள். ஆயினும் இவருக்கு ஒரு அழிவுமில்லை. ஒருசமயம் கோவிலையும் ஜோதியையும் கண்டுவிட்டார். ஆதலினால் இவர் மறுபடியும் அந்தக்கோவிலையும் ஜோதியையும் காணும் பாக்கியம் படைத்தார் ஆய்விட்டார். நற்கதியை யடையலாமென்ற ஒரு திடமும், சேவகமென்னும் கடமையும், அச்சேவகத்தால் வரும் சக்தியும் ஒருவாறு இவர் மனதில் பதியவும், அந்தக் குறுக்குவழியே நடந்து கோவிலின் வெளிப்பிராகாரத்திற்குப்போக வேண்டுமென்ற ஆர்த்தி இவர் மனதில் அடிக்கடி திரும்புகிறது.

(இன்னும் வரும்.)

பத்திராசிரியர்.

---

# நமதுதேசத்து நெசவுத்தொழிலின் நிலைமை.

இன்று நான் பிரசங்கிப்பதாகச் சொல்லியிருந்தது இந்தியாவில் நடந்தேறின நடக்கிற நடக்கும் நெசவுத்தொழிலின் விஷயத்தைப்பற்றியே. பாலியமுதல் நெசவுத்தொழிலில் மிகப்பழகினவனுதலாலும், இவ்விஷயத்தில் மிக சிரத்தையுடன் பல இடங்களில் நடந்தேறும் கைத்தொழில்களின் தாரதம்மியங்களைப் பற்றி நன்கு அறிந்திருக்கிறபடியாலும் இங்கு இவ்விஷயத்தைப் பற்றிப் பேச மிக ஆவலுடனும் மனோதிடத்தோடும் வந்தேன்.

முதலில் இந்தியாவில் வெகுகாலமாக நடந்தேறின நெசவுக் கைத்தொழிலைப்பற்றி ஆராய்வோம். வெகுகாலமுதல் இந்தியாவில் நெசவுக்கைத்தொழில் நடந்துவந்ததாகத் தெரியவருகிறது. 3000 வருஷங்களுக்குமுன் பஞ்சாடைகளை இப்பரதகண்டத்தினர்கள் உபயோகித்து வந்தார்களென்று பல சம்ஸ்கிருத நூல்களினின்றும் அறியலாம். சுமார் 2000 வருஷங்களுக்குமுன் கிரீஸ்தேசத்தின் ஒரு பாகமாகிய மெசிடோனியாவில் அரசுபுரிந்த அலெக்ஸாண்டர் தி கிரேட் என்பவர் இந்தியாவின் மே

*காசி நகரத்தில் நடந்த கைத்தொழிற் சங்கத்தில் ஆனரபில் விட்டல்தாஸ் தாமோதர் தேக்கர்ஸே என்பவர் செய்த உபந்நியாசத்தின் சுருக்கம்.

ல் படையெடுத்துவந்த காலத்து, இந்துக்கள் வெண்மை நிறமானவும் சித்திரமெழுதப்பெற்றவுமான பஞ்சாடைகளைத் தரித்திருந்தார்களென்று அவர்களால் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்து இறந்த 73-ம் வருஷத்தில் ஐரோப்பாவில் இறக்குமதியாகும் சாமான்களின் பெயர்களை பிளினி என்பவர் சொல்லிவரும்போது மெல்லிய சல்லாக்களை 'இந்துக்களின் மேலான மாசூமைபெற்ற பஞ்சாடைகளென்று' புகழ்ந்து வர்ணித்திருக்கிறார். 17 நூற்றாண்டுகளுக்கு முன் ரோமாபுரியில் அரசாண்ட அகஸ்தஸ் சீசர் என்னும் அரசனுடைய சபையின் அதிருபிகளை அலங்கரித்த ஆடைகள் அதிக ஆச்சரியத்தை உண்டுபண்ணக்கூடியவும் மிக அழகுவாய்ந்ததுமான நுண்ணிய சரிகைச்சல்லாக்களே. அவைகள் வங்காளத்திலுள்ள டாக்கா நகரத்தின் நெசவுத்தறிகளினின்றும் நெய்யப்பட்டவைகள். அக்காலத்தில் வேற்றரசர்களை வெற்றிகொண்ட வீரர்கட்கும், உத்தமகுலத்து முன்னோர்மனிகர்கட்கும், வங்காளம் கொடையாகக் கொடுக்கக்கூடியவைகளில் முதன்மை வாய்ந்ததும் யாதெனின் "நீரோட்டம்" எனப்பெயர் வாய்ந்த மஸ்லின் சல்லாவே. ஆங்கிலேயர்கள் இந்தியாவில் வந்த கொஞ்சகாலத்திற்குப் பிறகு அவர்கள் எழுதிவிட்ட ஒரு குறிப்பினால் இருபது கஜநீளமும் 1¼ கஜ அகலமுமுள்ள ஒரு துண்டு மஸ்லின் சல்லா 14 அவுன்ஸ் நிறையுள்ளதென்று அறியலாகிறது. அக்குறிப்பே அக்காலத்திலுள்ள வஸ்திரத்தின் நேர்த்தியான தன்மையைத் தெளிவுற வெளியிடுகின்றது. வேறொரு உதாரணமுமுண்டு. அது யாதெனில், 1846-ம் வருஷத்தில் டாக்கா நகரில் டாக்டர் டெயிலரென்பவர் தமக்கு மாதிரியாகக்காட்டப்பட்ட பாநூற்பந்தொன்றைப்பரிசோதித்ததில் அது 1349 கெஜநீளமும் இருபத்திரண்டு கிரெயின் ஸ்நிறையுள்ளதென்றும்கண்டறிந்தார். இதை மாதிரிவிகிதம்செய்து பார்க்கில் ஒருபவுண்டுபஞ்சினாலாகிய நூல் 250 மயில் நீளமுள்ளதாகலாகும். இப்போது ஆங்கிலேயர்கள் கொண்ட நூலின் அளவை ஒரு பிரமாணமாகக் கொண்டு அந்நூலின் தன்மையை யறியப்புகின், அது ——கௌண்ட் (நம்பர்) நூலாம். அந்த நம்பரை யந்திர சகாயத்தைக் கொண்டு கைத்தொழில் விருத்தியடைந்திருக்கிற இக்காலத்திற் கூடச் செய்ய முடியாதென்றால் அந்நூலின் நம்பரை என்னென்று சொல்வோம். நூலின் தராதரத்தை யறியக்கூடிய தகுந்த மதிப்பாளியொருவர் இங்கிலாந்தில் யந்திரங்களால் செய்யக்கூடிய நுண்ணிய பெரிய நம்பர் நூலைக் காட்டிலும் எவ்வளவோ மடங்கு நுட்பமான நூலை இந்துக்கள் கொட்டை நூற்கும் தடியும் ராட்டினமும் கொண்டு நூலிழைத்தார்களென்பது தன் மனோபாவனைக் கெட்டவில்லையென்று சொல்லும்படி நேர்ந்தது. முரட்டாயுதங்களைக் கொண்டு மிக நுண்ணிய நூல்களை நூத்



கும் இந்து ஸ்திரீகள், நூல்வழிப்பதிற் பெயர் பெற்ற கிரீஸ்தேசத்துத் தெய்வமாகிய ஆர்க்னிஸுக்குப் போட்டிக்காரர்களென்றே சொல்ல வேண்டும். இதற்கு ஐரோப்பியரின் நுட்பமாகிய புத்தியே சாக்ஷியாகும். 18-ம் நூற்றாண்டின் மத்திய காலங்களில் இந்தியாவில் கைராட்டினங்களால் இழைத்த நூல் இங்கிலாந்திலுள்ள லங்காஷயரிலமைத்த இயந்திரங்களாலிழைக்கப்பட்ட நூலை விட மிக நுட்பமாயும் மென்மையாயுமிருந்த படியால் அங்குள்ளவர்கள் அந்நாட்டில் நெய்த உடைகளை நீக்கி இந்தியாவில் நெய்யப்பட்ட வெண்ணிற ஆடைகளையும் சித்திரவாடைகளையும் விலை கொடுத்துக் கொண்டது மல்லாமலும், மான்செஸ்டர், பிளாக்பேண் என்னும் இடங்களிலுள்ள நெசவு வேலைக்காரர்கள் தங்களுடைய பஞ்சயந்திரச் சாலைகளில் வஸ்திரம் நெய்வதற்காக ஏராளமாக இந்து தேசத்தில் நூற்கப்பட்ட பாநூல்களைத் தம் நாட்டிற்கு விலை கொடுத்து வரவழைத்துக் கொண்டார்கள். ஐரோப்பியர்கள் நூதனமான யந்திரங்களைக் கண்டுபிடித்ததுதான் அவர்கள் வியாபார மேன்மைக்கும் நம் நாட்டுக் கைத்தொழிலின் கீழ்மைக்கும் காரணமாயிற்று.

1771-1772-ம் வருஷங்களில் பிளாக்பேணின் நெசவு தொழிலாளிகள் ஹார்க்ரைட், ஹார்கிரீவ், இன்னும் மற்றவர்கள் கண்டுபிடித்தவும் மென்மேல் விருத்திக்குக் கொண்டுவரப்பட்டவுமான சில யந்திரங்களின் சகாயத்தைக் கொண்டு சாதாரணமான பஞ்சவஸ்திரம் நெய்ய அறிந்து கொண்டார்கள். 1779-ம் வருஷத்தில் மியூல்ஜென்னி என்னும் யந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த யந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட காலமே வஸ்திரம் நெய்வதற்கு ஏற்பட்ட கால ஆரம்பமென்று சொல்லவேண்டும். பிறகு ஏற்பட்ட பல சீர்திருத்தங்களாலும், நீராவியந்திர வல்லமையும் அவ்வியந்திரங்களுக்கு உபகரணமாக அமைந்தபடியாலும், இலகுவில் வஸ்திரங்களை நெய்து குறைந்த விலைக்கு விற்கும்படி நேர்ந்ததால் இந்துதேச வஸ்திரங்கள் அங்கு விலையாகாமற் போனது மன்றி, இவ்விந்து தேசத்திலும் மேனாட்டுச் சரக்குகள் நாளும் குறைந்த விலைக்கு விற்கும்படி நேரிட்டது. கங்கைக் கரையின் ஓரத்திலுள்ள சிறிய குடிசைகளில் வசிக்கிற எழுத்தறியா எளிய இந்துக்களாலும் அவர்கள் முன்னோர்கள் பலராலும் அநேககாலமாக நெய்யப்பட்டு வந்த வஸ்திரத்திற்கு நிகராகும்படி பலவித யந்திரங்களின் உதவியைக் கொண்டு லங்காஷயரிலுள்ளவர்கள் நெய்தது ஒரு பெரிய விஷயமே. 1854-ம் வருஷத்தில் இந்துக்களின் கைத்தொழில் மிக வேறுபாடடைந்தது; ஏனெனில் அந்த வருஷத்தில் பஞ்சு யந்திரசாலை யொன்று முதல் முதலில் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டது. அது

முதல் 10 வருஷத்தில் 13 பஞ்சயந்திர சாலைகள் வேலை செய்ய ஆரம்பித்தன. கைத்தொழில் மேன்மேலும் விருத்திக்கு வந்ததைப் பின்வரும் கணக்காலறிக:—

| வருஷம். | | நெசவு யந்திரங்கள். | | ராட்டினங்கள். | | நெசவுத்தறிகள். |
|---|---|---|---|---|---|---|
| 1,865 | ... | 13 | ... | 285,000 | ... | 3,500 |
| 1,876 | ... | 47 | ... | 1,100,000 | ... | 9,100 |
| 1,886 | ... | 95 | ... | 2,261,000 | ... | 17,500 |
| 1,896 | ... | 155 | ... | 3,933,000 | ... | 37,200 |
| 1,905 | ... | 197 | ... | 5,163,000 | ... | 50,100 |

சென்ற 50 வருஷத்தில் கைத்தொழில் மென்மேலும் விருத்தியடைந்திருக்கிறதென்றும் நன்குவிளங்குகிறது. இப்போது 50 லக்ஷம் ராட்டினங்களும் 50,000 பவர் நெசவுத்தறிகளும் வேலைசெய்துவருகின்றன. அவைகளில் சுமார் 2 லக்ஷம் வேலைக்காரர்களும் அவ்வளவு தொகைக்குக் குறையாமல் சிற்றாள்களும் வேலைசெய்துவருகிறார்கள். மூட்டை ஒன்றுக்கு 392 பவுண்டு நிறையுள்ள 19 லட்சம் பேல் பஞ்சு மூட்டைகள் இந்தியாவில் வருஷம் ஒன்றுக்குச் செலவாகின்றன. அவைகள் இந்தியாவில் விளைகின்ற பஞ்சின் நூற்றுக்கு அறுபது பாகமாகும். அவைகளில், 58 கோடி பவுண்டு நிறையுள்ள பஞ்சு நூலாக இழைக்கப்படுகின்றது. 16 கோடி பவுண்டு நிறையுள்ள பஞ்சு 55 கோடி கெஜ நீளமுள்ள வஸ்திரமாகவும் வருஷம் ஒன்றுக்கு நெய்யப்படுகிறது. இவ்வளவு மிகுதியான கைத்தொழிலின் பாதிக்கு மேற்பட்ட பாகம் நடக்குமிடம் பம்பாய்த்தீவிலும் அதைச்சுற்றிலுமமைந்த பட்டினங்களிலுமேயாம். இந்தியாவில் நடக்கும் கைத்தொழிலின் முக்கால்பாகம் பம்பாய் இராஜதானியிலேயே நடந்துவருகிறது. இம்மாதிரியாய் இந்தியாவில் பஞ்சு யந்திரங்களால் செய்யப்படும் நூல்களும் வஸ்திரங்களும் எப்படிச் செலவாகிவிடுகின்றனவென்பதை எடுத்துக் காட்டுவோம். கணக்கின் மூலமாய் எடுத்து நிரூபிக்கவேண்டியிருப்பதால் இச்சமயத்தில் கேட்பவர்களுக்கு அது அவ்வளவு இன்பத்தைத் தராத சாரமற்ற விஷயமாயினும் என்னால் இயன்றமட்டும் வேண்டிய அளவெடுத்துச் சுருக்கிச் சொல்லுகிறேன்.

சென்ற வருஷத்தில் இந்தியாவில் இழைக்கப்பட்ட நூல் 58 கோடி பவுண்டு நிறையுள்ளது. அதில் 23½ கோடி பவுண்டு நிறையுள்ள நூல் அதாவது இழைத்த நூலின் நூற்றுக்கு 40 பங்கு, சீனம் முதலாகிய இதர நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. நம் நாட்டில் எவ்வளவு செலவாயதென்று அறிவோம்.



வஸ்திரம் நெய்யப்படும் யந்திரசாலைகளில் 13½ கோடி நிறையுள்ள நூலில் அதாவது இழைக்கப்பட்ட நூலில் 100-க்கு 23 பங்கு வஸ்திரமாக நெய்யப்பட்டது. பாக்கியுள்ள 21 கோடி பவுண்டு நிறையுள்ள நூல் அதாவது 100-க்கு 37 பங்கு நாட்டுத் தறியில் வேலைசெய்பவர்களால் உபயோகிக்கப்பட்டது. அதில் 100-க்கு 10 விகிதம் கயிறு, நாடா செய்வதில் உபயோகப்பட்டதென்று நீக்கிவிட்டால் பாக்கி 19 கோடி பவுண்டு நிறையுள்ள நூல் நாட்டுத் தறி வேலை செய்பவர்களால் வஸ்திரம் நெய்ய உபயோகிக்கப்பட்டது. வஸ்திரம் நெய்யும் பவர் யந்திரசாலையிலே 13½ கோடி பவுண்டு நிறையுள்ள நூல்தான் வஸ்திரமாக நெய்யப்பட்டதென்று எடுத்துரைத்தேன். மேற்சொன்னதைத் தவிர நாட்டுத் தறியில் வேலைசெய்தவர்களுக்கு நூல் வேண்டி ஆங்கில நாட்டினின்றும் 3 கோடி பவுண்டு நிறையுள்ள நூல் வரவழைக்கப்பட்டது. ஆதலால் நாட்டுத் தறியில் உபயோகிக்கப்பட்ட நூலின் நிறை 22 கோடி பவுண்டு ஆகும். அதாவது பவர் யந்திர நெசவுச்சாலையில் செலவாகும் நூலைவிட சுமார் இரட்டிப்பான நூலை கைத்தொழிலாளிகள் உபயோகிக்கிறார்கள். சென்ற வருஷத்தில் நாட்டுத்தறியில் நெசவாகிய வஸ்திரம் பவர் யந்திரசாலையில் நெய்யப்பட்ட வஸ்திரத்திற்கு இரட்டிப்புமடங்குள்ளதாயிருப்பதால் அக்கைத்தொழிலை அலக்ஷியம் செய்ய யாதொரு முகாந்தரமுமில்லை.

1901ம் ௵, எடுத்த ஜனசங்கைக்கணக்கின் பிரகாரம் இந்தியாவிலுள்ளவர்களில் பெரும்பாலோர் சாகுபடி செய்கிறவர்களே. அதற்கடுத்தபடியில் இருப்பவர்கள் தொழில்செய்கிறவர்களே. அக்கணக்கின்படி நம்நாட்டுத்தறிகளில் வேலைசெய்கிறவர்கள் 27 லக்ஷமென்றும் அவர்கள் சார்பாக இருந்து உதவுகிறவர்கள் 28 லக்ஷம் பேர்களென்றும் தெரியவருகிறது. யந்திரங்களால் நெய்யப்பட்ட வஸ்திரங்கள் இந்தியாவில் வரத்தலைப்பட்டதே நம்நாட்டுப்பழமையான நெசவுத்தொழில் மிக நஷ்டமடைவதற்கு முதற்காரணமாயுள்ளது. மேலே காட்டிய கணக்கின் பிரகாரம் அக்கைத்தொழில் ஜீவித்திருப்பதற்கு வேண்டிய தாது புஷ்டி இருந்தபோதிலும், அது நாளுக்கு நாள் மெலினத்தை அடைந்துவருகிறது. நம் நாட்டு ஜனங்களின் தேவைக்குவேண்டிய ஆடையினளவு எவ்வளவோ அவ்வளவில், எவ்வளவு பாகம் நம்நாட்டில் நெய்யப்படுகிறதென்பதை அறிய இங்குள்ளோர்யாவரும் ஆவலுள்ளவர்களாய் இருக்கிறீர்களென்று நம்புகிறேன். முற்கூறியபிரகாரம் நம்நாட்டின் யந்திரத்தறிகளில் சென்றவருஷம் நெய்யப்பட்ட துணி 52 கோடி கஜமே. இது போதாது அயல்நாடுகளினின்றும் ஏற்றுமதியான துணியின

ளவு 216 கோடி கஜமாம். அதாவது நமது நாட்டில் நெய்யப்படும் துணியைக்காட்டிலும் நாலுமடங்களவு அதிகமான துணி வெளிநாடுகளினின்றும் நமது நாட்டுக்கு வந்து சேருகின்றது.

நம் தேசத்திலுள்ள நெசவு யந்திரங்கள் மிகமட்டமான முரட்டு வஸ்திரங்களையே நெய்கின்றன. அவ்வஸ்திரங்கள் அவ்விதத்தன்மைகொண்ட நூலாலானவையென்று பரிசோதித்தால், அவைகள் 30 அல்லது 40ம் நம்பர் நூல்களுக்கு மேற்பட்டன வல்ல. ஆனால், வெளிப்பிரதேசங்களினின்று வரும் வஸ்திரங்களின் நூல் எவ்வித நம்பர்களாலாயதென்று நோக்கின், மேற்சொன்ன நம்பர்களுக்கு மேம்பட்டவைகளாகவே இருக்கின்றன. இந்தியாவிலுள்ள நெசவு யந்திரங்கள் பெரும்பாலும் மிக முரட்டுவஸ்திரங்களை நெய்ய ஏற்பட்டதற்குக் காரணம் யாதெனில், இந்தியாவிலுண்டாகும் பருத்தி மிகவும் தாழ்ந்த ரகத்தினதாயிருப்பதால்தான். இந்நாட்டில் உண்டாகின்ற பருத்தி எப்படி மிகவும் தாழ்ந்த இனமான தன்மைக்கு வந்ததென்றும், அதை எப்படி முதன்மையான நல்லபருத்தியாகப் பயிர்செய்யவேண்டுமென்றும் நான் இப்போது எடுத்துப்பேசவில்லை. ஆயினும், பருத்தியை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று மேற்கொண்டவர்களும், கவர்ன்மெண்டாரும், முதன்மைவாய்ந்த பருத்தியை அதிகமாக இந்தியாவில் உண்டாக்கத்தக்க முயற்சி எடுத்துவருகிறார்கள். அவ்விதப் பருத்திச்செடி பேலும் இங்கு அபிவிருத்தி அடையுமாயின், இந்தியாவின் நெசவுக்கைத்தொழிலும் மிகச்சிறந்தோங்கும். பம்பாய்த்துரைத்தனத்தாருக்குட்பட்ட விவசாயசங்கத்தின் மேற்பார்வையில், ஸிந்து மாகாணத்தில், எகிப்துநாட்டினின்றும் தருவித்த பருத்திக்கொட்டைகளைக்கொண்டு சாகுபடி செய்ததில் மிகவும் திருப்திகரமாகப் பயிராகின்றதென்றும் அப்படிப் பலவிடங்களிலும் பருத்தி சாகுபடி யிருந்தால், மேன்மையுள்ள நல்ல பருத்தி உண்டாகுமென்றும் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கிறார்கள். தென்னிந்தியாவில் பருத்திமரம் மிகவும் செழிப்பாய்வளர்ந்து மிகப் பயன் கொடுக்கக்கூடுமென்று மாதிரிக்காகப் பயிரிட்டவர்கள் சொல்லுகிறார்கள். இவர்கள் எதிர்பார்க்கிறபடி இந்தியாவில் வருஷம் ஒன்றுக்கு ஆறுலக்ஷம் பேல் பருத்தி பயிராகிக்கிடைக்குமாயின், இத்தேசத்து நெசவுத்தொழிலில் ஒரு பெரிய மாறுபாட்டை உண்டுபண்ணுமென்பதில் சந்தேகமில்லை.

இவ்விதப்பருத்தியைக் கொண்டு, மேலான சிறந்த நூல்களை இழைப்பதுமல்லாமல் உயர்ந்த நல்லஆடைகளையும் நெய்வார்கள். அவ்விதவஸ்திரங்கள் நம் நாட்டில் மிகச் செலவாகுமென்று, இத்தேயத்தில் இறக்குமதியாகும் சரக்குகளின் கணக்கு நமக்கு



நன்றாக எடுத்துக்காட்டுகிறது. இந்தியாவில் முதன்மைவாய்ந்த நல்ல பருத்தி அதிகமாகப் பயிராயின், ஐரோப்பியர்கள் நமக்குப் போட்டியாகவந்து நம்மிடமிருந்து அதிகவிலைகொடுத்துவாங்க முயல்வார்கள். ஆயினும், ஒரு தேசம் அபரிமிதமாகப் பருத்தி சாகுபடிசெய்து அதில் அருமையாகிய பருத்தி முழுவதும் அந்நாட்டிலேயே செலவழிக்கும்படியாக கைத்தொழில் மிகுதியிருந்தால், இதர நாட்டுப் போட்டிக்காரர்களைக்கண்டு நாம் நாட்டார் தளர்ச்சியடையாரென்பது என் துணிபு. ஆனால் நம்நாட்டு நெசவுக்கைத்தொழில் மேன்மேலும் விருத்தியடையுமென்பதில் சந்தேகமும் அதைரியங்கொண்ட எண்ணமுடையவனல்லன். ஆயினும், நம்மவரில் அநேகர் நமது நெசவுத்தொழில் சீர்கெட்டதென்றும் யந்திர நெசவுத்தறிகளால் முற்றிலும் அழிக்கப்படுமென்றும் ஒருவித அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய அபிப்பிராயத்தை மேற்கொண்டு நெசவுக்கைத்தொழிலை அலக்ஷியம் செய்யவேண்டாம். ஒவ்வொரு கிராமத்திலுமுள்ளது இக்கைத்தொழில். அவ்வவ்விடங்களிலுள்ள நெசவுக்காரர்களுக்கு ஆதாரம் சம்பாதிப்பதற்கோர் தொழிலாயிருப்பதுமன்றி மற்றக்கைத்தொழில் செய்பவர்களுக்கும், மழையற்று பஞ்சமுற்ற காலங்களிலும், விவசாயத்தொழில் நடைபெறாத காலங்களிலும், இத்தொழில் அற்றைக்கூலிக்காரர்களுக்கோர் ஆதாரமாயிருப்பதால், அதைக் கைவிடாது ஆதரித்தல் வேண்டும். இத்தொழிலை நம்மவர்கள் கையாடிவரும் கருவிகள் வேலைப்பாடில்லாதவைகளாயிருக்கின்றன. அநேக நூற்றாண்டுகளுக்குமுன் நம்முன்னோர்கள் கையாண்ட கருவிகளே சிறந்தவென்று நம்மவர்கள் நம்பியிருக்கிறார்கள். நூதனமாய்க் கண்டுபிடித்திருக்கும் கருவிகளின் பிரயோசனத்தை அறியாதவர்களாய், காலதேசவர்த்தமானங்களுக்குத் தக்கவாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதைத் தெரிந்துகொள்ளாமலுமிருக்கிறார்கள். நம் நாட்டில் நெசவுத் தொழில் செய்பவர்கள் எளிதில் சொற்ப விலைக்கு வாங்கி இலகுவும் விரைவாயும் தேகப்பிரயாசம் அதிகமின்றி வேலை செய்து, லாபமடையும்படி நம் நாட்டுத் தறிகளில் சில நூதனங்களை அமைத்துப் புதுப்பித்தவர்கள்; வங்காளக் கைத்தொழிற் கலாசாலைத் தலைவராகிய மிஸ்டர் ஹாவல், சென்னைக் கைத்தொழிற் கலாசாலைத் தலைவராகிய மிஸ்டர் சாட்டர்டன், ஆமதாபாத் நகரத்திலுள்ள மிஸ்டர் சர்ச்சில் என்பவர்களும் இன்னும் அநேகருமே. இவர்கள் நம் நாட்டுக் கைத்தொழில்களை மேன்மேலும் அபிவிருத்திக்குக் கொண்டுவரத் தங்கள் புத்தியூகங்களை வெளியிட்டு இத்தேசத்திற்கு நன்று உழைத்து வருகிறார்கள். நம் நாட்டு நெசவுத் தொழிலாளர்கள், பாவு நூலைத் தயார்செய்வதற்கு, ஒரு தடவையில் ஒரு சிறிய யந்திர

சகாயத்தால் 50 முதல் 100 இழைகள் வரையிலும் ஒரே தடவையில் சுற்ற வேண்டியதை விட்டு, இரண்டொழைகளுக்கு மேல் சுற்ற வல்லமையற்றவர்க ளென்று ஹாவல் என்பவர் எடுத்துக் காட்டியிருக்கிறார். ஐரோப்பியர்களின் புதிய கைத்தறிகளால் பவர் தறிகளுக்கு சளைப்பில்லாமல், எகிப்து தேசத்துத் தலைநகராகிய கய்ரோவிலும் ஐரோப்பாவில் அநேக விடங்களிலும் நெசவுத்தொழில் மிகுதியாக நடந்து வருகின்றன. அத்தறியில் அதிகமாக நாளொன்றுக்கு நெய்யக்கூடிய வேஷ்டியின் அளவு 48 கஜமென்று தெரியவருகிறது. வெளி நாடுகளிலிருந்து இவ்விந்து தேசத்தில் இறங்குமதியாகும் பருத்தித் துணிக்குச் சமமாக மிக லாபத்தைக் கொடுக்குமாறு நாட்டுத் தறிகளில் வேலை செய்யலாமென்று மிஸ்டர் ஹாவல்துரை கூறுகிறார். இந்தியாவின் க்ஷேமத்தைக் கருதுகின்ற ஒவ்வொருவரும் நம் நாட்டு வியாபாரம் சிறந்தோங்க, நம் நெசவுத்தறிகள் விருத்தியாகும் வண்ணம் தம்முழுமனதையும் ஊக்கத்தையும் செலுத்தவேண்டுகிறோம். இவ்விஷயத்தில் பொருளுதவி செய்து சரீரப்பிரயாசத்தால் உழைத்து வருகிறவர்களுக்குத் தக்கலாபம் கூடிவருமென்பதற் கையமில்லை. நம் நாட்டில் நெசவுத் தொழிலையே கைக்கொண்டு அதில் வரும் வருவாய்த்தால் ஜீவிக்கிறவர்கட்கு குறித்த காலத்தில் நாட்டுத்தறியினும் அதிகவேலை செய்யக்கூடிய, குறைந்த விலையுள்ள, நூதனத் தறிகளைத் தெரிவியாது, பணத்தால் உதவி செய்து தருவியாது, அவர்கட்கு வேண்டிய சகாயம் ஒன்றும் செய்யாது அசட்டை செய்திருப்போமாயின், அவர்களைத் தாரித்திரத்திற்கும் துன்பத்திற்கும் உள்ளாக்குகிறோம். அப்படி நாமிருக்கும்படி நேரிடுங் காலமே இந்தியாவின் துர்ப்பாக்கிய காலமென்று நினைக்கவேண்டும். ஆதலால் கைத்தொழில் விஷயத்தைப்பற்றி நம்முடைய முழு எண்ணத்தையுஞ் செலுத்தி, அது மேன்மேல் சிறக்கும் வழிகளைத் தேடி இந்தியா மிகுந்த கீர்த்தியும் பெருமையும் அடையுமாறு அதன் மக்களாகிய நாம் உழைக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

K. இராமானுஜ ஐயங்கார்.



... நெய்யுநு துன்னலர் நேர்ந்த காலையில்
...யாநற் றுணைவனு மாரும்பெறா முனையிற்
...தவே றன்ன சிறந்த தலைவனுந்
...ங்கபத் திரையுந் தார்க்கையு நாண
...ராங் காக்கு நற்றெறி யுடையனும்
...ழ்தரும் புண்ணியப் புதல்வனைத் தந்த
...ந்தையு மான தானையின் றலைவ!
...ந்தையிற் றவறிச் செய்த பிழைதனை
...ன்றே மறந்தி ; இறைவ னருளினன் ;
...ன்றே! தனிசில் நாகம வருக!
... (நாகமனை ஆசனத்திலமர்த்தி)
...ழையெனப் படுமோ? பெரியோய்! முதல்வன்
...ழவு நும் புகழைத் தரணிகொண் டாடச்
...செய்தனை ; இழிவு செய்ததாக் கன்னர்
...பெய்தனை ; நின்செயல் பிழையெனப் படுமோ?
...ன். ...ழங்குறு கலங்களில் வார்புனல் பெய்ததன்
...முழக்கினைப் போக்குத லவனியோர் செய்கை!
...ன்னன் பிகாப்பினில் வாண்டகை குறைபைத்
...தன்னுமன் னரிறுந் துடைத்தன னவையீர்!
சீருஷ். (சிம்மாசனம் விட்டிறங்கி நாகமனைத் தழுவி.)
என்னுயிர்த் தோழ! வெழுந்தியா மேகிக்
கான்னுதங் கதிரவன் சுடர்களைத் தாத்து
நிழலுந் தண்மையு நிலவிய சோலையின்
குழலில் ; பகருஞ் சொற்களுங் கனிய
மாற்றங் கூறுக ; வனிதை காஞ்சனைக்
(சபையோர்கள் எழுந்து நிற்ப.)
கேற்ற நாயக னெய்தினன் ; அவளும்
அணங்கினுக் கணங்காம், அறிவினுக் குழுவு,
குணங்களுக் குறைவிடம், கோலமா மஞ்சு,
அடியனுஞ் செய்யுங் காலமு மெதிர்த்தது ;
மடவாற் கேற்ற மணமகற் றேடுதல்
நம்பெருங் கடமை; நாகம! நினைத்துத்
வம்பவிழ் சோலை வழியே செல்லுதும்!
இம்ம! நீ வருக!
...ாமன். திருவுளப் படியே

அம்மணிக் கானவோ ராடவ னமையும் !

(கிருஷ்ணதேவன், திம்மன், நாகமன் இவர்களுடன் வெளியே செல்ல.)

குருபக்க. இளமை தொடங்கி யிந்நாள் வரையும்
உளப்பிணிப் போடு மொற்றுமைப் பட்டாள்,
ஆடலும் பாடலு மருங்கலைப் பயிற்சியும்
ஏடவிழ் மலர்ப்பொழி லினிதுலாந் தன்மையும்
ஒருங்குடன் பெற்ற வொண்டொடி நல்லாள்;—
இருங்கலை விநோதன் எழிலார் காதன்
தன்னையே யல்லால் தரணியி லெவரை
யுன்னுவ ளுதலாய்! உலகம் புரக்குந்
தேவனு மிதனைத் தெரிந்து நன்மணம்
யாவரும் விரும்பி யாணர் நன்னகர்
வீதியிற் றோரணம் விழைவுடன் பொருத்தி
வேதிகை திருத்த விரைவினின் முடிக்கக்
கருதினன். அவைேயார் கருத்து மன்னதாம்;
குரிசில்! உன் கருத்துங் கூறுக!

அச்சு. பெரியோய்!
என்னருந் தோழ னேற்றமிக் குடையோன்
நன்னலந் திகழு நங்கையை மணக்க
வேண்டு மென்றே விரும்பின னெடுநாள்;
ஈண்டுரை தந்திர்; என்மனங் களித்தேன்!

பக்க. அவையீர்! கேண்மின்! அவனிகா வலவன்
அவிரிழை நங்கையை யாண்டகை நாதற்
கெழின்மணம் புரிய விசைந்தனன்; அவ்வுரை
வழங்கென, மகிழ்ந்துரை வழங்கினன்; நீவிர்
களிப்புட னுங்கள் கடிமணம் போலத்
தினைத்துள மகிழ்ந்து திருமணங் காண்க!

அச்சு. (விசுவநாதனை நோக்கி)
நாதனே! வருக! நாமும்
போதுலாம் பொங்கரிற் பொழுதுபோக் குவமே!

(சபைகலைய)

களம்—6. முற்றும்.

---



## அங்கம்—4. களம்—7.

பூங்காவனத்தில் காஞ்சனையும், விசுவநாதனும் சந்தித்து உரையாடிக்கொண்டிருப்ப, அரசனும் நாகமனும் அவ்விடம் போந்து அவர்களைக்கண்டு ஆசீர்வதித்தனர். குருபக்க இவர்களது ஒற்றுமையைக்கண்டு மனதில் தியானிக்க அப்பொழுது தேவகானம் முழுங்கி மலர் மழைபெய்தது. மூர்த்தியம்மன் தனது முத்து மாலையை ஓர் பூங்கொடிக்குப் பூட்டி ஆனந்தக் கூத்தாடினள்.

## அங்கம்—4. களம்—7.

இடம்—பூங்காவனம். காலம்—எற்பாடு.

(அச்சுதனும், விசுவநாதனும் பளிக்குமேடையிலிருந்து உரையாட.)

அச்சு. (நேரிசையாசிரியப்பா)
நாத! நண்ப!—கவினு மென்மொழி
ஏதடா! நின்செவி பெறிடக் காணேன்—
தனிமையி லிருந்து தன்னுளத் தடமே
இனிமையிற் பேசி யிருக்குந் தருணம்
இதுவே யாதலின், ஏகு கின்றனன்!—

(அச்சுதன் பிரிந்துசெல்ல)

விசுவ. (தனியே)
மதிநிகர் முகத்தாள் மதுரமென் மொழியாள்
முத்தநேர் முறுவல் முருக்கிதழ்ச் செவ்வாய்
நத்தினை யொத்த நருமணி மிடற்றாள்
செவ்வரி படர்ந்து சேலினை மருட்டிப்
பல்லமே சாலும் படைநிகர் கண்ணாள்
நங்கை காஞ்சனை நந்தாக் காதல்
பொங்கிட வென்னைப் பொருட்டாக் கருதினள்!
பாக்கியம் படைத்தேன்! பாவையா ளெனக்கும்
ஆக்கிய காத லின்மதுள தாயினும்,
வாக்கினாற் புலப்பட வார்த்தை கூறிலன்;
நோக்கினாற் குறித்திலன்; நுவலருங் காதல்
தன்னிலே யொரந் ததும்பி நின்றனள்;
கன்னியின் மனத்தைக் கவர்ந்திடற் கான
இங்கிதங் காட்டி யிருப்பினேற் குற்ற
ந்த மென்வயின்; [illegible]

அத்தகை நடத்தில ஞாயினும், அவனுக்
கித்துணை பார்வ மியற்கையி னமைந்தது!
அங்கனை யன்பினு ளாக்கப் பட்டனன்!
(மூர்த்தியுள்ளேவந்து)
மூர்த்தி. பொங்குதேன் பொழியும் பொலந்தார் மார்ப!
பங்கய மலர்த்திப் படியினிற் புதுமையாய்
இங்கொரு கதிரவ னேகினன் கொல்லோ?
தலைவியின் மனைதைத் தன்னுடன் கவர்ந்தில்
விலைமரப் பொதும்ப ரிடைவெளிச் சென்ற
கள்வ னொருவனைக் கண்டனை கொல்லோ?
புள்ளிமா னன்ன பெற்றொடி வருந்த
எயினர் பதியென வெனைச் செலுத்தியிவ்
வயினொரு மதனன் வந்தனன் கொல்லோ?
பெண்மைக் கிரங்கும் பெருந்தகை! யென்பால்
உண்மையைப் பேசுக!
விசுவ. ஒன்று மறியேன்;
இவ்வழி யொருவரு மேகிடக் காண்கிலன்;
மூர்த்தி. எவ்வம் படைத்தென் னேழையை வருத்திய
கள்வனைக் கண்டேன்! கள்வனு நீயே!—
புள்ளினை யாடும் பொங்கரி னின்றனை,
உருவினு மொத்தனை, யுள்ளுறை வஞ்சனை
திருமுகந் தோற்றத் திருடனி னின்றனை,
கார்முகத் தழும்புன் கைத்தலங் கண்டனன்!
வார்குழற் றலைவிமுன் வம்பின், உம்மை
விட்டினிச் செல்லேன்!
விசுவ. விளங்கிழை! பழிதா
னிட்டனை, யினியெனக் கிளமான் விதிக்குந்
தண்டனை யெதுவோ?
மூர்த்தி. தன்னரு வன்பாத்
திண்கயி றிட்டுச் சிந்தையாஞ் சிறையில்
வைத்துனக் கென்றும் வார்த்தையா முணவைப்
பொய்த்திடா தளிக்கும்! போதுக!—
(காஞ்சனைபிரவேசிக்க).
தலைவியும்
வந்தனள், அம்ம!— மார! நீ மங்கையின்



சிந்தையிற் படுதல் செவ்விதே!—செல்வன்;
(மூர்த்திவெளியேசெல்ல.)
காஞ்ச. கருங்கலோ மனமும்? கருணைதா னிலையோ?
அருங்கலை பயின்றும் அழகுறப் பொலிந்தும்
நற்குணம் படைத்தும் நாடொறும் பழகியும்
எற்குறு காதலை யிவர்தரச் செய்தும்
உனையலா தொருவனு முறுதுணை வேண்டா
வினைவெனக் கருளியும் விடுகெட்ட காதலை
வெளிப்படக் குறிப்பின் விளம்பிய தையலைக்
களிப்புறச் செய்யாக் கைதவங் கொடிது!
விசுவ. வேந்தன் புதல்வியே! வினைத்துங் காதலைச்
சந்தத மொன்றும்! இடைபடுப் பதுக்க
நேர்ந்ததை யன்றி நேரிழை யறியேன்
சார்ந்ததோர் குற்றம்; தையலே! யுன்றன்
தந்தையு முனக்குத் தகுமணம் முடிக்கச்
சிந்தை செய்தொரு செங்கோ லிறைமைச்
சிறுவற் களிப்பன்!
காஞ்ச. செங்கோ லிறைமைச்
சிறுவ னெவனோ, சிங்கமே யனையாய்!
நின்பொருட் குறியான்?
விசுவ. நிலமுழு தாளு
மன்னவன் செல்வி! யுன்னவர் குலத்திற்
பிறந்து வளர்ந்தனை; பெரும்புக ழரசிற்
சிறந்தவ னொருவனைச் சேர்ந்திட லன்றி
எளியனை மணத்த லேற்ற மாகுமோ?
ஒளிமணி மாலை யுயர்முடி மன்னவன்
விதித்த வழியின் மெல்லியல்!
மதிதனைச் செலுத்தின் மனனை நொய்துமே!
காஞ்ச. (புன்னகைசெய்து)
(நேரிசையாசிரியப்பா)
நண்பரா நாதர் நடுநிலை பகர்ந்தார்,
பெண்பா லிரங்கிப் பெருமதி யுரைத்தார்;
சிறினைச் செய்யுந் திருவும்
பார்த்திவர் தன்மையும் பகர்தாக் கேண்மினே!
(நேரிசையாசிரியப்பா).

திருவெனத் தருவது திருவளர் புயத்தோய்!
ஒருவழி நில்லா தோடுஞ் சகடம்;
விழியினைக் கட்டி விளையாட் டயருந்
தொழிலினேர்க் குறும்பொருள்; தொகெடற் றவழும்
வெண்டிரை; ஆதலின், வேந்த!
உண்டுகொல் நிலைதான்? உள்ளந் தெளிகவே!

(நேரிசையாசிரியப்பா.)

பார்த்திவர் தன்மை பகரக் கேண்மோ,
பார்த்திவர் வியக்கும் பல்படை விநோத!
நகரமுஞ் செல்வமு நண்ணார் கைக்கொளப்
பகருந் துன்பம் பற்றினர் திரிந்தார்,
பொன்முடி துறந்தார், போர்க்களந் தவிர்ந்தார்,
மன்பதை யொறுக்க மாண்டனர் விடத்தால்
மாய்ந்தனர்; ஆதலின், மன்னவ!
ஆய்ந்தறிந் திதனை யகத்திற் றெளிகவே!

(நேரிசையாசிரியப்பா)

ஆதலி[illegible] மாக்கமும் பிறவும்
[illegible]யாய் நற்புகழ் நிலைக்கும்!
[illegible] வேண்டேன், ஐய! நின் காதலி
என[illegible] நிலம் இசைக்கும் பாக்கியம்
ஒன[illegible] வேண்டினன், உதவி புரிக.

விசுவ. [illegible] நலங் கூர்தரு மங்கையர் திலகமே!
உன்றன் பொருவறு குவங்தனிப் பாரினல்,
என்பழி முன்னிம்! என்முதி நவில்வாய்!

காஞ்ச. எறிபுனற் படிவனே! எரியிடைப் புகுவனே!
பிறிதொரு வங்கையாற் பிரிப்பனே வாவி!

விசுவ. பேதை! நீ கொண்ட பேதற வொழிக!
தாதை யெனக்கே தருவதா யெண்ணினன்!
பாவையே! யுன்றன் பணிதலைக் கொள்ளுஞ்
சேவக னாயினன்!

காஞ்ச. சேவக னீயோ?
என்பெருந் தலைவ! என்பெருஞ் செல்வ!
என்பெரு முயிரே! என்பெருங் காதல!
என்பெரும் பிறப்பே! என்பெரு மாசே!
என்பெரு முடலே! என்பெரு மனமே!



என்பெரு மதியே! யிருவரின் னுயிரும்
ஒன்றெனச் சேர்ந்ததோ ருயர்மணங் கண்டோம்!
ஓருயிர்க் கிரண்டுட லுற்ற ததிசயம்!

(மூர்த்தியம்மன், கிருஷ்ணதேவன், குருபக்க, நாகமன், திம்மன் இவர்கள் அங்கேவந்து நாதனுடன் நின்ற காஞ்சனையைக்கண்டு.)

கிருஷ். காரிகை வாழி! காதலன் வாழி!

நாகம. நங்கையும் வாழி! நாதனும் வாழி!

ஏனையோர். மங்கையு நாதனும் வாழி! நீடூழி!

குருபக்க. (தனியே)
காதலன் காதலி களித்ததைக் கண்டு
ஆதரத் தமர ரலர்மழை பொழிக!
கான மெழுக! காவுந் தளிர்க்க!

(தேவர்பூமழை சோரிந்து கானஞ்செய்ய.)

நாகம. வானகத் திருந்து மலர்மழை பெய்ததும்
இன்னிசை யெழுந்தது மிசைப்பரும் விந்தை!

குருபக்க. கன்னி தனக்கிசை காதல னென்று
விண்ணவர் தாமும் வியந்தனர் போலும்!

(மூர்த்தியம்மன் ஒருசார்மறைந்துகொள்ள, மற்றவர் வெளியே செல்ல.)

விசுவ. (தரையிற்கிடந்த ஒரு மலரையெடுத்துக் காஞ்சனைக்குத் தந்து.)
கண்மணி! யிம்மலர் கற்பகக் காவிற்
பூத்த நறுமலர்; பொலிவினைப் பாராய்!

காஞ்ச. எத்தரும் புகழோய்! இனியிற் செல்லுதும்
நித்தில மாலிகை னிலவிய
பத்தியிற் குயிற்றிய பன்மணி மாடமே!

(இருவரும் வெளியேசெல்ல.)

மூர்த்தி. (காதலன், காதலியிருவருக்கு நிழலைத்தந்த பூங்கொம்ப ருக்குத் தனது முத்துமாலையைச் சாத்தி.)

(நேரிசையாசிரியப்பா.)

அலர்தனைத் தாங்கி யசைந்திடுங் கொம்பே!
உலகினி லிவர்போ லொருமணப் பட்டார்
அரிதெனக் கண்டு,நீ யகைந்தலர் சொரிந்தாய்!
பெரிதெனு மாலையைப் பேதையே னளித்தேன்!

(மதிவிலாசனியுள்ளேவந்து.)

மதிவி. என்னடி! பேதாய்! பிம்பைக் கொம்புடன்
பன்னு மின்றினை பலபல மொழிகள்!
அன்னவரு மிப்படி யதிசய முற்று
நினைவொரு நிலையி னின்றிடா ராகிக்
களித்திடற் காரண காரிய மென்னை?

மூர்த்தி. களித்திடுங் காரணங் காரிகை கேளடி!
காதலிற் காவலன் கன்னியை
நாதனுக் களிக்க நானோர்ந்த மணமே!

(ஆனந்தக்களிப்பு.)

நல்ல மணமிது பெண்ணே!—சகி—
நாதனை யேபதி யாகப் பெறுமணம். (நல்ல)
காமப் பெருங்கடல் மூழ்கி—உறு—
காதினை வீசியே கன்னியைத் தேடிப்
பார்த்த செம்மண மென்னே?—புகழ்—
பூரக மெய்ப் படைத்தவன் செம்மணம், (நல்ல) (1)
மங்கை தனக்குயர் செல்வம்—வர—
வாஞ்சையிற் றேடி வரித்திடு மங்கலம்
மங்கல மாகுமோ? மாதே!—மட—
மானையிம் மன்னவன் மாலையி டுமணம். (நல்ல) (2)
மன்மத னழகினி லென்று—மன்—
மகளேயோர் வினையின் தேடி மடித்தல்
நன்மண மோ? புகழ் மன்னன்—மகிழ்—
ஞானநா ளோ நயந்திடு மாமணம். (நல்ல) (3)
படித்தவ னொருவன் றேடி—ஒரு—
பண்பு மிலாவெறும் பேதையை நாடிக்
கொடுப்பதோ நன்மணம்? சேடி!—வெறும்—
கோமக னாப்புகழ் மாமகன் செம்மணம். (நல்ல) (4)
உள்ள மொருநிலை கொண்டு—முயர்—
செல்வமுங் கல்வியு மொத்திடக் கண்டு
கொள்ளுந் திருமணம்! பண்டு—பயில்—
கோதில் தவமென்ன கூடின தின்று. (நல்ல) (5)

(இவ்விதம் இருவரும் ஆனந்தக்களியாடி வெளியேசெல்ல)

களம்—7. முற்றும்.

# தமிழகம்.

ந தஞ்சைத் தமிழ்ச்சங்கத்திலிருந்து மாதம் ...ம் ஒரு பத்திரிகை, இதன் வருஷ சந்தா இ... கு ரூ. 1—8—0. சிங்கப்பூர், பினங்கு, முதலான விட... ரூ. 2—8—0. இப் பத்திரிகை வேண்டுவோர் இதன் அவர்களிடத்தில் சந்தாவை முன்பணமாக நேரே கினும், அல்லது மணியார்டர் மூலமாயனுப்பியாகி கையைப் பெற்றுக்கொள்ளலாம். பலநண்பர்களின் ரிற்கிணங்கி மாணுக்கர்களுக்குச் சந்தாவைக்குறைத். ஆங்கில கலாசாலையிற் படிக்கும் மாணுக்கர்கள் ம உபாத்தியாயர் மூலமாய் விண்ணப்பம் செய்து களானால் அவர்களுக்குப் பத்திரிகை ரூ. 1—0—0க் படும். பத்திரிகைக்கு விஷயம் எழுத விரும்புகிற ள் வியாசங்களைப் பத்திராதிபர்பேருக்கு அனுப்பக் ம்.

ம் போடுவதற்கு வரி யொன்றுக்கு அணு 1. நீடிய த்து வரவேண்டியவைகளுக்குப் பிரத்தியேக ஏற் படும்.

**K. இராமானுஜ ஐயங்கார்,**
மானேஜர், தமிழகம்,
தஞ்சை.

---

## புத்தகவிளம்பரம்.

பிற் கண்டிருக்கும் புத்தகங்கள் தஞ்சைத் தமிழ்ச் லைக்கு அகப்படும். வேண்டியவர்கள் ஷை சங்கக் ந எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| யசிந்தாமணி, ஸமஸ்கிருத வசன | ரூ. அ. ப |
| வியம் (வாதீப சிம்மசூரியினால் செய்யப் டது) | 2—0—0 |
| சூடாமணி, (ஸம்ஸ்கிருதசாவியம்) லிகோகட்டிடம். | 0–15—0 |
| தர சம்புகாவியம், ஸம்ஸ்கிருதம் (ஹரிசந் மகாகவி.) | 1—0—0 |
| ச நாயக ராஜவம்சசரித்திரச் சுருக்கம், மிழ்) | 0—2—6 |
| கிருத நீதிமஞ்சரி, நம்பர் 1. | 0—6—0 |
| னாதவிஜயம். | 0—1—0 |
| காப்பியப்பாயிர விருத்தி. | 2—0—0 |
| மாற்று மாலை. | 0—4—0 |
| க்ஷேத்திர யாத்திராநுகூலம் | 0—4—0 |

ழ்ச்சங்கம், } உ. நா. அப்பாசாமி ஐயர்,
05 } உதவிக் காரியதரிசி

145312

# (ப)ரஸ்பர சகாய கல்யாண
# சபை.

(எட் ஆபீஸ், ம[illegible]ஜியப்பாவீதி, தஞ்சாவூர்.)

இந்தசபையில் சேரும் மெம்பர்கள் தங்கள் குழந்தை
[illegible]க்குக்கல்யாணம் செய்யுங்காலத்தில் திரவிய சகாயம் செ
[illegible]க்கப்படுவார்கள்.

இச்சபையினுண்[illegible]கும் லாபத்தை மெம்பர்கள் செ
[illegible]த்திற்குள் பார்க்[illegible]ம். குழந்தைகளுள்ளவர்கள் உ
[illegible] செய்யவேண்டிய கடமையை நி
வேற்[illegible] ஏற்படும் பணச்செலவிற்கு இச்சபையார்
உதவி செ[illegible]வதை ஜனங்கள் அறியவேண்டும்.
மரண பண்டுகளில் போல சேரும் மெம்பர்கள் ஜீவநாள் மு
தும் சந்தா செலுத்த வேண்டியதில்லை. குறிப்பிட்ட கல்யா
நடந்த பிறகு அவர்கள் சபையை விட்டுவிடலாம். ம
கொஞ்சமாய் செலுத்தியதை ஒரே காலத்தில் சேர்த்துக்
டுப்பதுடன் குறைந்தது இரண்டு மடங்கு ஒவ்வொருவருக்
போனஸ் கிடைக்கும்.

மாத சந்தா ரூ. 1 அல்லது ரூ. 2 கொடுத்துவந்தால் க
ண சமயத்தில் கொடுத்த தொகைக்கு இரண்டுமடங்குக்குக்கு
யாது தகுந்த உதவி கிடைக்கும்.

சென்ற ஜூலை மாதத்தில் திருவாரூரிலிருந்து சேர்ந்த
மெம்பருக்கு ரூ. 55 விவாக காலத்தில் சபையிலிருந்து கொ
கப்பட்டது. அவர் செலுத்திய தொகை ரூ. 10 தான்.

இதில் மூவகை கல்யாணங்களுக்கு மெம்பராகச் சேர
— உபநயனம், விவாகம், திரஷிகல்யாணம்.

சேரும்போது பிரவேசக் கட்டணம் ரூ. இரண்டு

தகுந்த கனவான்கள் டைரெக்டர்களாயிருந்து சபை
நடத்திவருகிறார்கள்.

விபரமான ரூல்புஸ்தகம் விலை அணா ஒன்று, பை. ஆறு. அ
பி வாங்கிப்பார்க்கலாம். சேருபவர்களுக்கு வெகு லாபமுள

பணம் அனுப்புவோர்கள் தஞ்சாவூர் கல்யாண சு
ஹைஸ்கூல் உபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ கே. இராமானுஜ ஐ
காருக்கு மணியாடர் மூலமாய் அனுப்பவும். அவர் ரசீது த
வேறு ரசீது செல்லாது.

ஆங்காங்கு கமிஷன் எஜெண்டுகள் தேவை.

பணம் தவிர மற்றைய சகல லெட்டர்களும் பின்வரும் வி
சத்திற்கு அனுப்பவும்:—

மானேஜர், பரஸ்பர கல்யாணசபை.